Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விலை ரூபா 10.00

**Dialog** டயலொக்

kit

எந்நேரமும் என்னுடன்....

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் மற்றும் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் SIM இணைப்புக்களையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகளுக்கும்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்திலிருந்தும் ஒருசில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

Sri Murugan
Tele Communication & Agency
Post Office.
303, K.K.S. Road, Jaffna.

T.P: 021 222 5392,
Fax: 222 3214
E.Mail: srimurugan@eureka.lk

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 தை 05 ஹிஜ்ரி 1426 துல்ஹஜ் 17 (18.01.2006) புதன்கிழமை இதழ் 110

# கிளைமோரில் சிக்கியது பஸ்; 12 கடற்படையினர் படுகாயம்!

## பதில் தாக்குதலில் 2 தமிழர்கள் பலி

திருகோணமலை—


திருகோணமலை - உப்புவெளியில் கடற்படையினரின் பஸ் மீது நேற்றுக் காலை நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 12 கடற்படையினர் படுகாயமடைந்ததுடன் - படையினரின் பதில் தாக்குதலில் இரு பொதுமக்கள் உயிரிழந்தனர்.

உப்புவெளி 3 ஆம் கட்டை சந்திக்கு 50 யார் தூரத்தில் அமைந்துள்ள அரசாங்க கால்நடை மருத்துவ அலுவலகத்துக்கு முன்பாக மேற்படி தாக்குதல் இடம்பெற்றது.

டொக்யாட் கடற்படைத்தளத்திலிருந்து கடற்படை முகாமுக்கு 19 கடற்படையினரை ஏற்றிச்சென்ற பஸ்ஸே தாக்குதலுக்குள்ளானது.

தாக்குதல் இடம்பெற்றதையடுத்து கடற்படையினர் அந்தப் பகுதியில் மேற்கொண்ட கண்மூடித்தனமான சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு தமிழ் மக்கள் கொல்லப்பட்டதுடன், 7 பேர் படுகாயமடைந்தனர்.

3 ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த கட்டடத் தொழிலாளியான செல்வராஜா (வயது 37) என்பவரும், அரசாங்க கால்நடை வளர்ப்புப் (12 ஆம் பக்கம் பார்க்க)



## சரசாலையில் கிளைமோருக்கு சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம்—

தென்மராட்சி சரசாலைப் பகுதியில் படையினரின் உழவு இயந்திரம் மீது நேற்று நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குலில் ஒரு இராணுவச் சிப்பாய் உயிரிழந்தார், மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.


நேற்று பிற்பகல் 1.30 மணியளவில், கனகன்புளியடி - பருத்தித்துறை வீதியில் சென்று கொண்டிருந்த படையினரின் உழவு இயந்திரம் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் 1 சிப்பாய் கொல்லப்பட்டதாகவும், மேலும் இருவர் படுகாயமடைந்ததாகவும் இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் 2 படையினர் பலியானதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தச் சம்பவத்துக்கு பொங்கியெழும் மக்கள் படை உரிமை கோரியுள்ளது.

அதேவேளை, இந்த கிளைமோர் தாக்குதலையடுத்து சரசாலை, புத்தூர் சந்தி உள்ளிட்ட பகுதிகளில் பெருமளவானோர் படையினரின் தாக்குதலுக்குள்ளானதாகத் தெரியவருகிறது.

# இராணுவ வன்முறை தொடர்ந்தால் நிலைமை மேலும் மோசமடையும்!



## நோர்வே தூதரிடம் தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி—

தமிழர் தாயகப் பகுதிகளில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இராணுவக் காடைத்தனங்களை கட்டுப்படுத்தாவிடின் மக்களின் கொந்தளிப்பு நிலையை மாற்றுவது கடினமென்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்று

மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் ஆகியோர் சந்தித்துப்பேசினர்.

இந்த சந்திப்புக்களுக்கு பின்னர் ஊடகவியலாளரிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியதாவது -

நோர்வேத்தூதுவரை முதலில் சந்தித்தோம். தற்போதுள்ள மோசமான நிலைமைகளை அவருக்கு விவரித்தோம்.

'எமது அப்பாவித் தமிழ்பேசும் மக்கள்



தார்.

கிளிநொச்சியில் அரசியற்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்று நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தோம். தற்போதுள்ள மோசமான நிலமை களை அவருக்கு விவரித்தோம்.

எமது அப்பாவித் தமிழ்பேசும் மக்கள் தொடர்ந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழுவின் பணிகள் திருமலையில் இடைநிறுத்தம்!

திருகோணமலை —

இலங்கை போர்நிறுத்தக் கண்கா ணிப்புக்குழு நேற்று முதல் திருகோ ணமலை மாவட்டத்தில் தமது பணி களை இடைநிறுத்துவதாக அறிவித் துள்ளது.

இது தொடர்பாக விடுதலைப் புலி களின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் தெரிவித்ததாவது -

திருகோணமலை மாவட்டத்தின் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு எமக்கு ஒரு அறிவுறுத்தல் விடுத்திருந்தார்.

அந்த அறிவிப்பில் மாலை 4 மணி யிலிருந்து போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழுவின் பணிகளை நிறுத்தி, அலு வலகத்தையும் மூடி வைக்குமாறு கொழும்பு தலைமையகத்திலிருந்து அறிவித்தல் வந்திருப்பதாக தெரிவிக் கப்பட்டிருந்தது.

இதற்கான காரணத்தை நாம் அவ ரிடம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ படுகொலைகளை கண்டித்து நாடாளுமன்றத்துக்குள் ஆர்ப்பாட்டம்!

## தமிழ்க்கட்சிகளின் எதிர்ப்பால் சபை ஒத்திவைப்பு

கொழும்பு —

தமிழர் தாயகப்பகுதிகளில் தொடர்ச் சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் இரா ணுவத்தினரின் இனப் படுகொலைகை ளைக் கண்டித்து அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தால், நாடாளுமன்றம் ஒத்திவைக்கப் பட்டது.

2006 ஆம் ஆண்டின் முதலா வது நாடாளுமன்ற அமர்வு நேற்று காலை 9 மணிக்கு தொடங்கியது.

வடக்கு- கிழக்கில் தமிழ்மக்கள் தொடர்ந்து இராணுவத்தினரால் படு கொலை செய்யப்பட்டு வருவதைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு, இலங்கை தொழிலாளர் காங் கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மேலக மக்கள் முன்னணி ஆகியவற் றின் உறுப்பினர்கள் இணைந்து கண் டனக் குரல்களை எழுப்பினர்.

சபைக்குள் நுழைந்த நாடாளு மன்ற சபாநாயகர் லொக்கு[illegible]ண்டா ரவை முற்றுகையிட்டனர். இ[illegible]னால் (12 ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் இளைஞர் கடத்தி கொலை அக்கரைப்பற்றில் பதற்றநிலை!

அம்பாறை —

அம்பாறை - ஆலையடிவேம்பு பிரதேசத் தில் முஸ்லிம் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத் தையடுத்து அக்கரைப்பற்று பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

அட்டாளைச்சேனையைச் சேர் ந்த அகமது லெப்பை அப்துல் வாஹித் (வயது 35) என்ப வரே கடத்தப்பட்டு கொல்லப்பட்டவராவார்.

அப்துல் வாஹித்துடன் மோட்டார் சைக்கி ளில் பயணம் செய்த நாகூர் தம்பி ஆதம் லெப்பை (வயது 25) தாக்குதலில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சிகையலங்கரிப்பாளர் இருவர் கைதடியில் சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம் —

கைதடிப் பாலத்துக்கு அருகில், தச்சன்தோப்பு வீதியில் வைத்து இரண்டு சிகையலங்கரிப்பு தொழிலாளர்கள் மோட்டார்சைக்கிளில் வந்த ஆயுதபாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கைதடி மானிப் பாய் வீதியில் சிகை அலங்கரிப்பு நிலையம் நடத்திவந்த தச்சன்தோப்பைச் சேர்ந்த சிதம்பரி கணேசரட்ணம் (வயது 44), இவரது உதவியா ளரான விஸ்வர் கிருஸ்ணன் (வயது 52) ஆகி யோரே சுட்டுக் (12 ஆம் பக்கம் பார்க்க)




ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்....

EXPOAIR

021-222 3891, 222 6297, 077-2349999, 011-2372952/3, 011 - 2360290/1

email:jaffna@expoavi.com, reservations@expoavi.com.

your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமானசேவை...



# உயிரையும், இருப்பையும் உறுதிப்படுத்த பாதுகாப்பான பகுதிக்கு செல்வதே சிறந்தது

## தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்—

யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரும், அவர்களுடன் இணைந்து செயற்படும் தேசவிரோதக் கும்பல்களும் மக்கள் மீது நடத்திவரும் தாக்குதல்கள், கடத்தல்கள், படுகொலைகளிலிருந்து விடுபட்டு உயிரையும், இருப்பையும் உறுதிப்படுத்த பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்வதே சிறந்தது என தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களாக யாழ். குடாநாட்டில் மக்கள் மீது நடைபெற்று வரும் தாக்குதல்களைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ். குடாநாட்டில் தொடரும் அரச படை, அதனுடன் இணைந்தியங்கும் தேசவிரோத ஒட்டுக்குழுக்களால் அப்பாவிப் பொதுமக்கள் மீதான கொடூர வெறித்தனத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

கடந்த சில மாதங்களாக அரச படைகளின் புலனாய்வுத்துறையும், ஈ.பி.டி.பி போன்ற ஒட்டுக்குழுக்களும் அப்பாவிப் பொதுமக்களை கடத்துவதும், ஆயுதங்கள் மூலம் சுட்டும், வெட்டியும் மற்றும் பெண்களை கொடூரமாக பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கிக் கொல்வதும், காட்டுமிராண்டித்தனமாக பொதுமக்களை கொல்வதும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இதற்குப் பருத்தித்துறையில் படையினரின் பாதுகாப்புடன் வெள்ளை வானில் வந்த ஒட்டுக் குழுவினர் கடந்த 11 ஆம் திகதி காலை இரு இளைஞர்களை கடத்திச் சென்றுள்ளனர். இதை படையினரின் பாதுகாப்பில் பதுங்கி உள்ள தேசவிரோத சக்திகளே நடத்திவருகின்றது என்பது பொதுமக்கள் யாவரும் அறிந்ததே.

இதனைத் தொடர்ந்து மானிப்பாயில் ஆயுதம் தரித்த படையினரும், தேசவிரோதக் குழுக்களும் இணைந்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அப்பாவிப் பெண்கள் 3 பேரை கொன்றொழித்துள்ளனர். அத்துடன் மேலும் இருவர் படுகாய மடைந்துள்ளனர்.

யாழ். குடாநாட்டில் மட்டுமல்ல திருகோணமலையிலும் அண்மையில் வீட்டின் மீது கைக்குண்டு வீசப்பட்டது. இதன்போது அப்பாவிக் குழந்தை உட்பட பலர் பலத்த காயங்களுக்குள்ளாகினர். தமிழர் தாயகமெங்கும் புலனாய்வாளர்கள் தமது இயலாமையை பொதுமக்கள் மற்றும் பெண்கள், குழந்தைகள் மீது வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இதற்குத் தமிழ்த் தேசியத்தைக் காட்டிக் கொடுக்கும் தமிழின கயவர்களும் துணைபோகின்றனர். இவர்களின் கூட்டு இன அழிப்பே அண்மைக் காலத்தில் நடந்தேறியுள்ளது. அத்துடன் சிறு எலும்புத்துண்டுக்கு வாலாட்டும் கயவர்கள் இருக்கும் வரை இது தொடரப்போகின்றது.

அரச புலானாய்வுக் கோழைகளும் தமிழினத்தை அழிக்க கங்கணம் கட்டியுள்ளன. அவர்களின் கைக்கூலிகளும் இத்தகைய அப்பாவிப் பொதுமக்கள் மீதான கொலைகள், கடத்தல்களை வன்மையாகக் கண்டிப்பதுடன் இதனை உடன் நிறுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

இல்லையேல் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் கிளர்ச்சியின் மூலம் உங்கள் நடவடிக்கைகள் ஒடுக்கப்படும் என எச்சரிக்கிறோம்.

தமிழீழ மக்களே! எமது உயிரையும், இருப்பையும் உறுதிப்படுத்த தற்போது பாதுகாப்பான தாயகப் பிரதேசங்களுக்குச் சென்று தலைவன் பின்னால் அணிதிரண்டு தமிழின அழிப்பை மேற்கொள்ளும் கயவர் கூட்டத்தை தாயகப் பிரதேசத்தில் இருந்து விரட்டி அடிப்போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாவற்குழி இளைஞன் உரும்பிராயில் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்—

உரும்பிராய் கரந்தன் பகுதியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நாவற்குழி வீட்டுத்திட்டத்தில் வசித்துவரும் சுப்பையா முருகன் (வயது 28) என்ற இளைஞனே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

உரும்பிராயில் உள்ள உணவகத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தவேளை கடையினுள் நுழைந்த இனந்தெரியாத நபர்கள் பிரஸ்தாப நபர்மீது மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனாவைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மருத்துவ பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

## பொதுச் சேவையாளர் மீதான கொலைக்கு இலங்கை முதலுதவிச் சங்கம் கண்டனம்!

யாழ்ப்பாணம்—

யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரும், அதனோடு சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுக்களும் திட்டமிட்டு நடத்துகின்ற கைதுகள், கடத்தல்கள், கொலைகள், பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு சம்பவங்கள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றன என யாழ். மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் வடமாகாண ஆணையாளர் நாகேந்திரன் போஜன் குடும்பத்தினர் மீதான தாக்குதல்கள் தொடர்பாக வெளியிட்ட கண்டன அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கை சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் வடமாகாண ஆணையாளரும், காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத் தலைவரும், இலங்கை முதலுதவிச் சங்க செயற்குழுத்தலைவருமாகிய நாகேந்திரன் போஜன் உட்பட அவரின் குடும்பத்தினர் வெள்ளைவானில் வந்த இராணுவ புலனாய்வாளர்களாலும், ஒட்டுக்குழுக்களாலும் கொடூரமான முறையில் சுடப்பட்டுள்ளனர்.

இதன்போது போஜனின் மனைவி, மகளான ரேணுகா (ஆங்கில ஆசிரியர்), சண்முகா ஆகியோர் உயிரிழந்தனர். போஜன், மக னான உல்லாசன் (கணித ஆசிரியர்) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறான பொதுச் சேவையில் ஈடுபடுகின்ற சேவையாளர்களை கொடூரமான முறையில் கோழைத்தனமாக கொலைசெய்யும் செயலை மிகவும் வன்மையாகக் கண்டிப்பதோடு இவ்வாறான செயல்கள் தொடருமாயின் போஜன் வழிநடத்தலிலும், அரவணைப்பிலும் வளர்ந்த ஆயிரம் ஆயிரம் தொண்டர்களாகிய நாங்கள் பொதுச் சேவையினை தூக்கி எறிந்து விட்டு, ஆயுதம் ஏந்திப் போராடும் நிலை தோன்றும் என்பதை இறுதியாகக் கூறிவைக்க விரும்புகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

SRI LANKA RED CROSS SOCIETY

**Sri Lanka Red Cross society(SLRCS)**

*Working in conjunction with the Australian Red Cross (ARC)*

**JOB VACANCY- ARC/SLRCS COMMUNITY LIAISON OFFICER (KILINOCHCHI)**

The Australian Red Cross in cooperation with the Sri Lanka Red Cross society is implementing a housing reconstruction project in Vadaramarchy East, Jaffna District. To assist the general wellbeing and community development of the project beneficiaries a livelihoods (in come generation) component has been included in the project.

Australian Red Cross is seeking a person with the appropriate skills and experience for the position of community liaison officer for its program coordination office based in Kilinochchi. This person will be required to live and travel within the Kilinochchi District.

**Qualifications:**

- Tertiary degree preferably in one or more of the following: community Development, micro – Finance and Economics, Small Business Development and Training, Agriculture and/or Fisheries.
- At least 3 years work experience in a similar position.

**Competencies:**

- Experience in field extension work and delivery of training.
- Working with rural communties in participative activities to increase their welfare.
- Demonstrated discussion/ negotiation skills, a strong grasp of concepts of community participation in decision – making, and an ability to work independently.
- Good working ability ( written, oral and aural ) with the Tamil, Sinhala and English languages.
- An ability to work with and for a team of professionals, of both foreign and local origin.
- Ability to ride a motorcycle and holder of a current motorcycle licence essential. Car licence an advantage.

**Responsibilities**

- Acting as the primary contact between the ARC project manager and beneficiary communities.
- Holding regular meeting with community representatives in order to gauge their opinion and wishes.
- Ensuring that the communities' viewpoints are clearly articulated in the process of house and infrastructure design.
- Prepare and implement community surveys, and analyse the data collected.
- To contribute to project management and work with varied stakeholders that include architects, engineers, project managers, and local authorities.

**Application including curriculum vitae:** Should be submitted to the Director of the Srilanka Red Cross Society in Jaffna (73 Kandy Road) or Kilinochchi (Railway Station Road). Full details of educational background, Work experience and referees must be provided.

*Application deadline: 28 January, 2006* (C-5022)

நிறைஞ்சனாஸ் சங்கானை

அர்ஜுன், நமீதா, வடிவேல் நடித்த

ஆணை



காட்சிகள் 11.00,2.30,5.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்

இளைய தளபதி விஜய், திரிஷா (வருகிறான் வரிப்புலி நாதியாய்) மற்றும் பலர் நடிப்பில்

ஆதி

இயக்கம் ரமணா



தயாரிப்பு - S.A சந்திரசேகர் இசை -வித்தியாசாகர்

(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு)

காட்சிகள்;- 10.30, 1.30, 4.30, 7.30. (புதிய நேரம்)

சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

இரண்டு வயது Great Dane ஆண் நாயும், British Bull dogo ஆண், பெண் நாய்களும் மலிவான விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு :- 0777 491062. (2166)

**நோயாளிகளின் கவனத்திற்கு**

உங்கள் வியாதிகள் கண்டுபிடிக்க முடியாதவையா? நாட்பட்டவையா? மாற்றமுடியது என வைத்தியர்கள் பலர் கைவிரித்து விட்டார்களா?

கவலை வேண்டாம்! எங்களை நாடுங்கள். ஷென்மென் அக்குபன்ச்சர் வைத்தியசாலை, தபால் பெட்டி சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி. (மியூசிக் வேர்ல்ட் முன்பாக) (2166)

நாகதன்சோ யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

அல்டிமேட் ஸ்ரார் அஜித், லைலா, விவேக், பிரகாஸ்ராஜ் நடித்த

**பரமசிவன்**

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க நேரம் மாற்றப்பட்டுள்ளது.

காட்சிகள்;- 09.00, 12.30, மாலை 3.30, (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்

சிம்பு ஜோதிகா பிரகாஸ்ராஜ் நடித்த

சரவணா

இயக்கம்: கே.எஸ்.ரவிக்குமார்



காட்சி : பு.நே. 10.30, 2.15 மட்டும். ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**ஹற்றன் நஷனல் வங்கி**

அடகுபொருள் மீட்டல்/ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

எமது வங்கி யாழ்ப்பாணக்கிளை, மற்றும் சுன்னாகம் கிளையில் அடகு வைத்து ஒரு வருட காலத்தினுள் மீட்கப்படாத அடகுபொருட்கள் முன்னர் அறிவிக்கப்பட்டமைக்கமைவாக 21.01.2006 சனிக்கிழமை 9.30 மணிக்கு யாழ். கிளையில் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும்.

முகாமையாளர்.

C/5021

# பேச்சுக்களுக்குத் திரும்புமாறு கொபி அனான் வலியுறுத்து!



கொழும்பு—

அரசையும், விடுதலைப் புலிகளையும் உடனடியாக நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் அதிகரித்து வரும் வன்முறைகள் மற்றும் யுத்த அச்சம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் -

படுமோசமான நிலைமையை அடைந்துள்ள இலங்கையின் பாதுகாப்பு நிலவரம் தொடர்பாகத்தான் மிகுந்த கவலையடைவதாகவும், கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்காணிப்புக்குழு அலுவலகம் மீதே தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறித்து தாம் வேதனையடைவதாகவும் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு ஒரு புதிய சகாப்தத்துக்கான நம்பிக்கையையும், கடந்த நான்கு வருடகாலமாகக் கணிசமான பலாபலன்களையும் அளித்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் கடந்த சில மாதங்களாகத் தொடர்ச்சியாக வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன. மீண்டும் தொடங்கியுள்ள இந்த வன்முறைகள் திரும்பவும் பொதுமக்களுக்குக் கடுமையான அனுபவங்களைக் கொடுக்க ஆரம்பித்துள்ளது.

மீண்டும் யுத்தத்துக்குத் திரும்புவது இரு தரப்பினருக்கும் இடை யிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எந்த வகையிலும் உதவப்போவதில்லை.

ஆகவே, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை உறுதிசெய்து அதன் மூலம் மனித உரிமைகளுக்குப் பாதுகாப்பும், மரியாதையும் அளித்து நேரடி சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

# யுத்த சூழ்நிலை ஏற்பட இப்போது! வாய்ப்பில்லை!

## பதில் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு—

நாட்டில் யுத்த சூழ்நிலை ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்று பதில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் அத்துல ஜெயவர்த்தன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

நாட்டுமக்களின் பாதுகாப்புக்காக முப்படையினரும், பொலிஸாரும் அதிக அர்ப்பணிப்புடன் செயற்படுவதனால், நாட்டிற்குள் யுத்த சூழ்நிலை தோன்றக்கூடிய வாய்ப்பில்லை.

கிளைமோர் குண்டையோ, கண்ணிவெடியையோ வெடிக்கச் செய்து விடுதலைப் புலிகளினால் படையினர்மீது கடுமையான அச்சுறுத்தல்களை விடுக்கமுடியாது. படையினரின் தேடுதல்கள் 24 மணி நேரமும் மேற்கொள்ளப்படுகிறது.

அண்மையில் மடு வீதியில் வைத்துக் கண்டெடுக்கப்பட்ட மிகப்பெரிய கிளைமோர் குண்டுகளின் எடை 40 கிலோவாகும். இந்தக் குண்டுகளை வெடிக்க வைப்பதற்காகத் தூர இருந்து இயக்கும் கருவிகளுக்குப் பதிலாக, 300 மீற்றர் தூரத்திலிருந்து இயக்கும் தகவல் பரிமாறல் கருவியைப் பயன்படுத்த விடுதலைப்புலிகள் தயராகியிருந்ததாகவும் -

விடுதலைப்புலிகளின் யுத்த தந்திரங்களை புரிந்துகொண்டு பாதுகாப்புப்படையினர் தற்போது மிகவும் கவனமாகச் செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# திட்டமிட்டபடி ஏப்ரலில் உயர்தரப் பரீட்சை!

கொழும்பு—

க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் இந்த ஆண்டு திட்டமிட்டபடி ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று - பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

இந்தப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க இயலாத தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு மற்றுமோர் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பரீட்சைக்கான நேர அட்டவணையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதுடன் உயிரியல், இர சாயனவியல், பௌதிகவியல் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் இறுதியாக நடைபெறும்.

அடுத்த ஆண்டு உயர்தரப் பரீட்சைகள் தேசிய உற்சவ தினங்களைத் தவிர்த்து நடத்தும் சாத்தியம் பற்றி பரீட்சைகள் திணைக்களம் கவனம் செலுத்திவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# கோத்தபாயவின் அனுமதியுடனே அதிரடிப்படையினர் திருமலைக்கு!

## அனுப்பப்பட்டதாகக் கூறுகிறார் கொட்டகதெனிய

கொழும்பு—

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் அனுமதியுடன்தான் 24 பேர்கொண்ட விசேட அதிரடிப் படை அணியொன்றைதிருகோணமலைக்கு அனுப்பியதாக - பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் கொட்டகதெனிய தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் 5 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு கொட்டகதெனிய அனுப்பிய இந்த விசேட அதிரடிப்படைப் பிரிவே காரணமெனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இதுகுறித்து கொழும்பு ஆங்கில வார இதழொன்றுக்கு தகவல் வெளியிட்ட கொட்டகதெனிய மேலும் தெரிவித்ததாவது -

24 பேர் கொண்ட விசேட அதிரடிப்படைப் பிரிவை திருகோணமலைக்கு அனுப்பிவைத்ததை நான் ஏற்றுக்கொள்கின்றேன். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொள்ள முன்னரே இந்த விடயம் முடிவுசெய்யப்பட்டது.

திருகோணலையிலுள்ள சிங்கள மக்கள் தமக்கு பாதுகாப்பில்லையென தொடர்ச்சியாக என்னிடம் முறையிட்டனர். திருகோணமலை முக்கிய நகர் என்ற வகையில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டி பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டிய அவசியம் குறித்து நான் உணர்ந்தேன். இதனாலேயே விசேட அதிர டிப்படை அணியொன்றை அங்கு அனுப்பி வைத்தேன் எனத் தெரிவித்தார்.

இதேவேளை - இந்தச் சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மறுத்துவிட்டார்.



இதுகுறித்து பொது விவாதமொன்றில் ஈடுபடத் தான் தயாரில்லை எனவும், ஏற்கனவே இது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஐ.தே.க. உயர்மட்டக் குழுவின் தலைவராக கரு ஜயசூரிய!

கொழும்பு—

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நிலவிவந்த தலைமைப்பதவி இழுபறிகளை முடிவுக்குக்கொண்டு வரும் நோக்கில் - புதிதாக உருவாக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் தலைவர் பதவிக்கு கரு ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் பிரதித் தலைவர் பொறுப்புடன் பல அதிகாரங்கள் அடங்கிய ஓர் உயர்மட்டப் பதவியாக இந்தப் புதிய பதவி வழங்கப்பட்டுள்ளது. கட்சியிலும், தலைமையிலும் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கான அதிகாரம் உட்பட கட்சியின் கொள்கை மற்றும் அரசியல் ரீதியான தீர்மானங்களை எடுப்பதற்கும் இவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைவராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் கடமையாற்றும் அதே வேளை, கட்சியின் அடுத்தகட்ட நகர்வுகள் உட்பட கொள்கைரீதியான பலமாற்றங்களைக் கொண்டுவரும் பணிகளை கரு ஜயசூரிய முன்னெடுக்கவுள்ளதாகக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

# மகிந்த அரசை ஏமாற்றுவது புலிகளுக்கு நல்லதல்லவாம்!

## மங்கள சமரவீர கூறுகிறார்



கொழும்பு—

ரணில் விக்கிரமசிங்க காலத்தில் விடுதலைப் புலிகள் ஏமாற்றப்பட்டதற்காக, மகிந்த ராஜபக்ஷவும் அதேபாணியில் ஏமாற்றுகிறார் என்று விடுதலைப் புலிகள் கருதுவது தவறு என்று - வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்னுமொரு ரணில் விக்கிரமசிங்க அல்ல. மிகவும் நேர்மையுடனும், பொறுமையுடனும் செயற்படும் தற்போதைய அரசை திட்டமிட்டே வன்முறைக்குள் தள்ளவைக்கும் விடுதலைப் புலிகளின் செயற்பாடு கண்டிக்கத்தக்கது. அவர்களின் சதிவலைக்குள் அரசு ஒருநாளும் விழுந்துவிடாது.

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் பேச்சுவார்த்தை என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு அரசு ஒருபோதும் இணங்கப்போவதில்லை.

ஆனால், இதுவரை குறிப்பிடப்படாத இன்னுமொரு புதிய இடத்தில் பேச்சுக்களை நடத்துவதற்கு மகிந்த அரசு தயாராக இருக்கிறது என்றும் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

# கடற்படை தளபதியை கொல்ல சதி; பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்!



கொழும்பு—

கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொடவை கொல்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சதி குறித்து வெளிநாட்டு புலனாய்வுப்பிரிவின் அறிக்கை- படை உயர் அதிகாரிகளால் கையளிக்கப்பட்டதையடுத்து, பொலிஸ் புலனாய்வுப்பிரிவு பரந்தளவிலான விசாரணையை ஆரம்பித்துள்ளது.

உள்ளக புலனாய்வுப்பிரிவுப் பணிப்பாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கீர்த்தி கஜநாயக்கவின் கையொப்பத்துடன், பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு அனுப்பப்பட்ட இந்திய புலனாய்வுப் பிரிவான றோ வழங்கிய அறிக்கை தொடர்பாகவே இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த புலனாய்வுப்பிரிவின் அறிக்கைக்கமைய விடுதலைப் புலிகளுடன் தொடர்புகள் வைத்துள்ள பெண்மணி ஊடாக, கடற்படைத் தளபதியின் போக்குவரத்துகள், நடமாட்டங்கள் மற்றும் அவரது பாதுகாப்புக் குறித்த தகவல்கள் புலிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், இதனைத் தொடர்ந்து கடற்படைத் தளபதியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு உலகவங்கியும் வலியுறுத்து!

கொழும்பு—

வன்முறைகளை உடனடியாக நிறுத்தி, பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி - கொழும்புக்கான உலக வங்கியின் இயக்குநர் பீற்றர் ஹரோல்ட் அரசாங்கத்தையும், புலிகளையும் கோரியுள்ளார்.

மோசமடைந்து செல்லும் தற்போதைய நிலைமையில் எட்டப்படாத உடனடி முன்னேற்றம் நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் விழுந்த ஆழமான வடுவாகவே அமையும்.

ஏனைய சர்வதேச அமைப்புக்கள் போலவே நானும் இரு தரப்பையும் வன்முறைகளைக் கைவிட்டுவிட்டு கூடிய விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி வலியுறுத்துகிறேன்.

எனது எதிர்பார்ப்புத் தொடர்பாக சாதகமான திருப்புமுனைக்காக நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் வருகையில் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கைக்கான உலக வங்கியின் உதவி கடந்த 20 ஆண்டுகளாகவே அமைதி நிலையின் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டுவருகின்றது.

ஆகவே அரசும், விடுதலைப் புலிகளும் இயலுமானவரை விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்க முன்வரவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

## விமானப்படை சிப்பாய்மீது திருமலையில் கிரனேட் வீச்சு

திருகோணமலை—

திருகோணமலையில் உள்ள அன்புவழிபுரம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 8 மணியளவில் விமானப்படையைச் சேர்ந்த சிப்பாய்மீது கைக்குண்டு ஒன்று வீசப்பட்டதில் அவர் பலத்த காயங்களுக்குள்ளானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தின்போது மூன்று பொதுமக்கள் காயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (10) (04)

# தெற்கில் இணக்கப்பாடு காண அனைத்துக் கட்சிகளின் கூட்டம்!



கொழும்பு—


அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய கூட்டத்தொடரில் இனப்பிரச்சினைக்கான பொது இணக்கப்பாட்டைக் காண்பதற்கான முயற்சியாக மகிந்த ராஜபக்ஷ தலைமையில் - இந்தவாரம் முதலாவது கூட்டம் இடம்பெறவுள்ளது.

இந்த வாரத்திலிருந்து நடைபெறவுள்ள இத்தகைய கூட்டத்தொடரில் அனைத்துக் கட்சிகள் தவிர, பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் சில கூட்டங்கள் இடம்பெறுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது இணக்கப்பாடு காண்பதற்கான இந்தக் கூட்டத் தொடரின் முதற்கட்டக் கூட்டங்கள் 3 மாதங்களுக்குத் தொடருமென்றும், அதில் காணப்படும் முன்னேற்றங்களுடன் இரண்டாம் கட்ட கூட்டத்தொடர் ஆரம்பமாகுமென்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

## வி.பி கிண்ண முக்கோணத் தொடர்

# தென்னாபிரிக்கா 94 ஓட்டங்களால் இலங்கையிடம் தோல்வி கண்டது!



மெல்பேர்ன் —

அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வரும் வி.பி கிண்ண முக்கோணத் தொடரின் நேற்றைய தென்னாபிரிக்க - இலங்கை அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் இலங்கை அணி 94 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத் தடுப்பைத் தேர்ந்தெடுத்தது. இதனால் இலங்கை அணி துடுப்பெடுத்தாடியது. அவ்வணி சார்பாக தரங்க மற்றும் முபாரக் இருவரும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர்.

இவர்கள் இருவரும் ஆரம்பத்தில் சற்று நிதான ஆட்டத்தைக் கடைப்பிடித்த வேளை, தரங்க 16 ஓட்டங்களுடன் முதல் விக்கெட்டாக வீழ்த்தப்பட்டார். இதன்போது அணி 33 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அடுத்து 2ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த சங்ககார சிறப்பாக விளையாடினார். இவர்கள் இருவரதும் இணைப்பாட்டத்தை தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்கள் பிரிப்பதற்கு சிரமப்பட்டனர். இவர்களின் பொறுப்பான ஆட்டத்தால் அணியின் ஸ்கோர் அதிகரித்தது.

அணி 145 ஓட்டங்களைப் பெற்ற வேளையே இரண்டாவது விக்கெட் வீழ்த்தப்பட்டது. இதில் 69 பந்துகளில் 9 பவுண்டரிகள் அடங்கலாக 61 ஓட்டங்களைப் பெற்றிருந்த முபாரக், போத்தாவின் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆகி பவிலியன் திரும்பினார்.

இவரையடுத்து டில்ஷான் இணைந்து கொண்டார். எனினும், மறுமுனையில் நின்ற சங்ககார சிறப்பாக விளையாடினார். இந்த நிலையில் 20 பந்துகளில் 15 ஓட்டங்களைப் பெற்றிருந்த டில்ஷானின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. இவர் ஆட்டமிழக்கும்போது அணி 172 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதன்பின் அணித் தலைவர் அத்தபத்து இணைந்து கொண்டார். இவரும் தன் பங்கிற்கு அணியின் ஸ்கோரை உயர்த்தியவேளை, மறுமுனையில் நின்ற சங்ககாரவின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. 109 பந்துகளில் 10 பவுண்டரிகள் அடங்கலாக 88 ஓட்டங்களைப் பெற்றிருந்த சங்ககாரவின் விக்கெட்டை பொலக் வீழ்த்தினார். இதன்போது அணியின் ஸ்கோர் 211 ஆக இருந்தது.



இதனையடுத்து ஜெயவர்த்தன இணைந்து கொண்டார். ஆனால், அவர் 15 பந்துகளில் 1 சிக்ஸர், 1 பவுண்டரி அடங்கலாக 14 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில், போத்தாவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து ஆர்னோல்ட் இணைந்து கொண்டார். எனினும், 43 பந்துகளில் 2 பவுண்டரிகள் அடங்கலாக 33 ஓட்டங்களைப் பெற்று மறுமுனையில் ஆடிக் கொண்டிருந்த அத்தபத்து ரன் அவுட்டானார். இதன்போது அணி 259 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.



அத்தபத்துவின் ஆட்டமிழப்பையடுத்து வாஸ் இணைந்துகொண்ட போதிலும், 50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஆர்னோல்ட் 15, வாஸ் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

26 ஓட்டங்களை உதிரிகளாகக் கொடுத்த தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களில் போத்தா 2, சொண்டேகி, நூஜர் மற்றும் பொலக் மூவரும் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இதனையடுத்து 283 ஓட்டங்களை எடுத்தால் வெற்றியென்ற நிலையில், சிமித் மற்றும் டிப்பென்னர் ஆகியோர் களமிறங்கினர். ஆனால், தென்னாபிரிக்க அணி 8 ஓட்டங்களைப் பெற்றிருக்கையிலேயே முதலாவது விக்கெட்டாக 3 ஓட்டங்களுடன் இருந்த சிமித் ஆட்டமிழந்தார்.

அடுத்து ரூடொல்ப் இணைந்தார். எனினும், 30 ஓட்டங்களை அணி பெற்றிருந்தவேளை, 10 ஓட்டங்களுடன் நின்ற டிப்பென்னரை குலசேகர போல்டாக்கினார்.

இதன்பின் கிப்ஸ் இணைந்து கொண்டார். எனினும், அவர் 16 பந்துகளில் 7 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் - ரன் அவுட்டானார்.


இதனையடுத்து பிறின்ஸ் இணைந்து கொண்டார். இந்த ஜோடி சற்று நிதானமாக ஆடி அணியின் ஸ்கோரை அதிகரித்தவேளை, 63 பந்துகளில் 8 பவுண்டரிகள் அடங்கலாக 53 ஓட்டங்களைப் பெற்றிருந்த ரூடொல்ப், ரன் அவுட்டானார். இதன்போது அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

களத்தில் நின்ற பிறின்ஸுடன் பௌச்சர் இணைந்து கொண்டார். இந்த ஜோடி அணியின் ஸ்கோரை உயர்த்துமென எதிர்பார்க்கப்பட்ட வேளை, 44 பந்துகளில் 2 பவுண்டரிகள் அடங்கலாக 29 ஓட்டங்களைப் பெற்றிருந்த பிறின்ஸ் பண்டாரவின் பந்தில் குலசேகரவிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அடுத்து தென்னாபிரிக்காவின் அதிரடி ஆட்டக்காரர் கெம்ப் இணைந்து கொண்டார். ஆனால், அவர் ஓட்டங்



களை எடுக்கச் சிரமப்பட்டார். 21 பந்துகளில் 10 ஓட்டங்களை எடுத்திருந்த இவரது விக்கெட்டையும் பண்டார



வீழ்த்தினார்.

அடுத்து பொலக் இணைந்தார். ஆனால், அவர் 4 ஓட்டங்களுடன் வாஸின் பந்தில் வெளியேற்றப்பட்டார்.

அடுத்து ஹேறால் வந்தார். அவரும் 4 ஓட்டங்களுடனும், அடுத்துவந்த போத்தா 2 ஓட்டங்களுடனும் முரளியால் வெளியேற்றப்பட்டனர்.

இதனையடுத்து நூஜர் இணைந்தார். ஆனால், 71 பந்துகளில் 2 சிக்ஸர், 3 பவுண்டரிகள் அடங்கலாக 62 ஓட்டங்களைப் பெற்றிருந்த பௌச்சரின் விக்கெட்டை பண்டார வீழ்த்தியதனால், தென்னாபிரிக்க அணி 44.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 188 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

பந்துவீச்சில் பண்டார 3, முரளி மற்றும் வாஸ் இருவரும் தலா 2, குலசேரக ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# இரண்டாவது டெஸ்டுக்கான பாகிஸ்தான் அணி அறிவிப்பு

லாகூர் —

இந்திய - பாகிஸ்தான் அணிகளிடையேயான 2ஆவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி பைசலாபாத்தில் தொடங்குகிறது. இந்தப் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் மாற்றமில்லையென்று அந்தநாட்டு கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

முதல் டெஸ்டில் இடம்பெற்றுள்ள வீரர்களே 2ஆவது டெஸ்டிலும் விளையாடுவார்கள். பாகிஸ்தான் அணி வருமாறு - இன்சமாம் (கப்டன்), சல்மான் பட், சொகைப் மலிக், யுனுஸ்கான், மொகமட் யூசுப், அப்ரிடி, கம்ரன் அக்மல், அக்தர், மொகமட் சமி, ராணா நவீட், டனேஷ் கனேரியா, இம்ரான் பர்கத், அப்துல் ரசாக், மொகமட் ஆசிப், அர்ஷத் கான்.

விளையாட்டு

# மோசமான காலநிலை காரணமாக சமனிலையான லாகூர் டெஸ்ட்



லாகூர் —

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே லாகூரில் இடம்பெற்றுவந்த முதலாவது டெஸ்ட் போட்டியின் 5ஆம் நாளான நேற்றும் மழை குறுக்கிட்டதனால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

நேற்றையதினம் 14 பந்துகளே வீசப்பட்டது. இதில் இந்திய அணியின் ஆரம்ப வீரர்களான ஷேவாக், ராவிட் இருவரினதும் இணைப்பாட்டம் முன்னைய இந்திய வீரர்களின் உலக சாதனையான 413 ஓட்டங்களை முறியடிப்பர் என எதிர் பார்க்கப்பட்ட போதிலும், அணி 410 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஷேவாக்கின் விக்கெட் வீழ்த்தப்பட்டதனால், அந்த சாதனை முறியடிக்கப்படவில்லை.


நேற்றையதினம் 254 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஷேவாக் நவீட் உல்-ஹசனின் பந்தில் விக்கெட் காப்பாளர் கம்ரன் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் 247 பந்துகளில் 47 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 254 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

அத்துடன் 1 இனிங்ஸில் அதிக பவுண்டரிகள் அடித்த லக்ஷமனின் (44) சாதனையையும் இவர் முறியடித்தார். இவரது ஆட்டமிழப்பைத் தொடர்ந்து லக்ஷ்மன் வந்தார். எனினும், மழை மீளவும் குறுக்கிடவே ஆட்டம் நிறுத்தப்படுவதாக நடுவர்கள் அறிவித்தனர். இதனால் இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் சமனிலையில் முடிவடைந்தது.

இதில் ராவிட் 128 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக ஷேவாக் தெரிவானார். அத்துடன் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்கூலிக்கும் கௌரவப் பரிசு வழங்கப்பட்டது.

# பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுத்தது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளதாம்

## ஷேவாக் கூறுகிறார்



லாகூர் —

பாகிஸ்தான் அணியைவிட, இந்திய அணியே சிறந்த அணி என்று இரட்டைச் சதம் அடித்த இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரர் ஷேவாக் கூறினார்.

பாகிஸ்தானுக்கு எதிராக லாகூரில் நடைபெற்றுவரும் முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய தொடக்க ஆட்டக்காரர் ஷேவாக் இரட்டைச் சதமடித்தார். பின்ன போட்டி குறித்து அவர் கூறியதாவது -

2004ஆம் ஆண்டு முல்டானில் நடந்த டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி தோற்ற பின்னர், தற்போது அந்த அணியினர் பாதுகாப்பு ஆட்டம் ஆடி வருகின்றனர். பாகிஸ்தான் அணிக்கு சிறப்பான ஆட்டத்தின் மூலம் தக்க பதிலடி கொடுத்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

400 ஓட்டங்களுக்கு மேல் எடுத்த பின்னரும் இந்திய அணி ஒரு விக்கெட்டைக்கூட இழக்கவில்லை. ஆட்டத்தின் முடிவு எப்படி இருக்கும் என்பது தற்போது முக்கியமல்ல. எவ்வளவு ஸ்கோர் அடித்துள்ளோம் என்பதுதான் முக்கியமானது. மொத்தத்தில் இந்த 4 நாள் ஆட்டங்களின் முடிவில் பார்க்கும்போது பாகிஸ்தானைவிட இந்திய அணி சிறந்ததாக உள்ளது.

குறிப்பாக பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களைவிட, இந்திய பந்துவீச்சாளர்கள் சிறந்தவர்கள் என்பதும் தெரிந்துள்ளது. நாங்கள் பாகிஸ்தானின் 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினோம். ஆனால், பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களால் ஒரு விக்கெட்டைக் கூட வீழ்த்தமுடியவல்லையெனத் தெரிவித்தார்.

# வெற்றி பெற்றார் ஆனந்த்


நெதர்லாந்து —

கோரஸ் சூப்பர் கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் தொடரின் முதல் சுற்றில், இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் வெற்றிபெற்றார்.


நெதர்லாந்தில் உள்ள விச் ஒன் ஜி நகரில், சர்வதேச அந்தஸ்து பெற்ற கோரஸ் சூப்பர் கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் தொடர் நடைபெறுகிறது. முன்னணி வீரர்கள் பங்கேற்கும் இந்தத் தொடரின் முதல் சுற்றுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் நடந்தன. இதில், இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த், உக்ரைனின செர்கி கர்ஜாகினை எதிர்த்து விளையாடினார்.

விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் 37 ஆவது காய் நகர்த்தலில் ஆனந்த் வெற்றிபெற்றார். மற்றொரு போட்டியில் - உலக செஸ் சம்பியனான பல்கேரியாவின் வாசெலின் தபலோவ், அமெரிக்காவின் கதா காம்ஸ்கியை வென்றார். முதல் சுற்றுக்களின் முடிவில் ஆனந்த் மற்றும் தபலோவ் ஆகியோர் முன்னிலையில் உள்ளனர்.

இதுவரை நான்கு முறை (1989, 1998, 2003, 2004) கோரஸ் செஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்றுள்ள இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த், இந்த முறையும் கிண்ணத்தை வெல்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.



# தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை




## பகுதி - I

♦ இல 1-5 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களிலும் முதலாவதாக உள்ள இரண்டு சொற்களிடையே ஏதோ ஒரு விதத்தில் நெருங்கிய தொடர்பு உள்ளது. அவ்வாறான நெருங்கிய தொடர்புள்ள இரண்டு சொற்களை தெரிந்து அதற்குரிய இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.

1) பசு-பால்
1.மாடு-வண்டி 2.கழுதை-பாரம்
3.யானை- தந்தம் 4.கோழி- முட்டை (.........)

2) விதை - மரம்
1.களிமண் -குடம் 2. நீர்-கிணறு
3.விளக்கு-எண்ணெய் 4.பூ - மணம் (..........)

3) நகம் - விரல்
1.உடம்பு-தோல் 2.முடி-தலை
3.வீடு-கூரை 4.திரை-யன்னல் (..........)

4) புத்தகம்- கடதாசி
1.பூ-கொடி 2.சாடி-தண்ணீர்
3.பாண்-மாவு 4.புளிப்பு-மாங்காய் (..........)

5) உடம்பு - தலை
1.விளக்கு- எண்ணெய் 2.மரம்- பட்டை
3. கிணறு-நீர் 4.பூ-நிறம் (..........)

♦ பின்வரும் கவிதையைப் படித்து இல 6-10 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

கழனி முற்றிச் சாய்ந்திருந்த
கார்அறுத்துக் கொண்டு வந்தது
வாசல் ஓரம் சொத்து அவன்
வருத்தம் ஒய்ந்தான் பார்த்து

6) கழனி என்பதற்கு ஒத்த சொல்.
1.விவசாயி 2.வயல் 3.கடற்கரை 4.வாசல்

7) ஓய்ந்தான் என்பது
1.பெயர்ச்சொல் 2.அடைமொழி
3.வினைச்சொல் 4.வினையெச்சம்

8) இப் பாடலில் கார் அறுத்தல் என்பது
1.வாகனம் ஓட்டுதல் 2.மரம் வெட்டுதல்
3.கத்தியால் வெட்டுதல் 4.கார்காலத்துப் பயிர் அறுவடை.

9) சொத்து என்பதன் பொருள் தருக?........................................

10.சாய்ந்திருந்த என்பதைப் பிரித்து எழுதுக?............. + .................

♦ பின்வரும் A,B,C,D என்ற அடைப்புக்குள் சில பாடசாலை உபகரணங்களும், சில பழங்களும்,சில காய்கறிவகைகளும் காணப்படுகின்றன. இதற்கேற்ப 11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

| A | B | C | D |
|---|---|---|---|
| அடிமட்டம் | புத்தகம் | கரட் | பேனா |
| தோடம்பழம் | அப்பிள்பழம் | தேனீர் | பிஸ்கட் |
| வாழைப்பழம் | கோவா | கேக் | முள்ளங்கி |
| அதிபர் | பப்பாசி | கொய்யாப்பழம் | கொப்பி |
| பால் | பென்சில் | பலா | பழரசம் |

11) இந்த அடைப்புகளிடையே இரண்டு பாடசாலை உபகரணம் வீதம் உள்ள மூன்று அடைப்புகளும் எவை?
1.A,C,B 2.B,C,D 3.A,B,D

12) இந்த அடைப்புகளிடையே இரண்டு பழங்கள் வீதம் உள்ள மூன்று அடைப்புக்களும் எவை?
1.D,B,C 2.A,B,D 3.A,B,C

13) இந்த அடைப்புக்களிடையே மாவினால் தயாரிக்கும் உணவுப் பொருட்கள் எவை?
1.C யும் D யும் 2. A யும் D யும் 3. B யும் C யும்

14) இந்த அடிப்புகளிடையே மரக்கறியுள்ள அடைப்புகள் எவை?
1. B,D,A 2. B,C,D 3.A,B,C

15) இந்த அடைப்பினுள் பூரண உணவுப் பொருள் ஒன்று உண்டு. அதை எழுதுக.

.....................................................................

♦ பின்வரும் உருக்களுக்குள் உள்ள எண்கள் ஏதோவொரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதற்கமைய நான்காவது கோலத்திற்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.

16)

| | |
|---|---|
| 2 | 1 |
| 4 | 2 |

(1)

| | |
|---|---|
| 6 | 3 |
| 4 | 2 |

(2)


| | |
|---|---|
| 5 | 2 |
| 10 | 4 |

(3)

| | |
|---|---|
| 6 | ...... |
| 9 | 3 |


(4)

17)





இதன் சுற்றளவு யாது?.......................................

18)



இந்த உருவில் காணக்கூடிய முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?.......................................

19)




இந்த உரு இரண்டிலும் சுற்றளவை நோக்கும் போது கீழேயுள்ளவற்றில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
1. A யை விட B சுற்றளவு கூடியது.
2. B யை விட A சுற்றளவு கூடியது.
3. A யும் B யும் சுற்றளவு சமமானது.

20) சுதன் ஒரு தொகை தேயிலையை வாங்கி அவற்றை ஒவ்வொன்றும் 250 கிராம் நிறையுடைய 36 பக்கற்றுக்களில் அடைத்தான் எனின், அவன் வாங்கிய தேயிலை எத்தனை கிலோ கிராம்?.....................


♦ பின்வரும் வினாக்களில் வித்தியாசமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

21) வாழைப்பழம்/ பப்பாசிப்பழம்/ பலாப்பழம்/ நாவற்பழம்.
22) கம்பர்/ திருவள்ளுவர்/ அருச்சுனன்/ ஔவையார்
23) குயில்/ காகம்/ வெளவால்/ ஆந்தை
24) சிங்கம்/ கரடி/ மாடு/ மான்
25) பூசணி/ புடோல்/ பீர்க்கு/ அவரை

♦ சரியான விடையைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.
(பல்லி/ தொங்கு/ தூக்குக்குண்டு/ தர்மசக்கரம்/ குரும்பை/ வண்டு/ நுங்கு)


26) மேசன் தொழிலாளி ...............................தனது கருவியாகப் பயன்படுத்துகின்றான்.
27) வீட்டில் வாழும் ...........................மாமிச உண்ணியாகும்.
28) அரச இலச்சினையில் மேல் ...............................உள்ளது.
29) பெரிய நகரங்களில் வீதியைக் கடப்பதற்கு...............பாலத்தை அமைத்துள்ளனர்.
30) தென்னையின் இளங்காய்............................. எனப்படும்.

♦ இங்கு தரப்பட்டுள்ள அடைப்புகளினுள்ளே இருக்கும் உருக்களுக்கு யாதாயினும் ஒரு பெறுமதிகளின் மொத்தம் குறுக்காகவும் கீழ் நோக்கியும் தரப்பட்டுள்ளது.




31. ☒ உருவின் பெறுமதி யாது?.......................
32. △ உருவின் பெறுமதி யாது?.......................
33. ◸ உருவின் பெறுமதி யாது?.......................
34. ⊘ உருவின் பெறுமதி யாது?.......................


35) சம அளவுடைய கட்டடங்களால் ஆக்கப்பட்ட நான்கு உருக்கள் தரப்பட்டுள்ளன. மிகக் கூடிய பரப்பளவைக் கொண்ட உருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.



# தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை


## பகுதி - II


♦ 1) கீழ்த்தரப்பட்டுள்ள உருவினை அவதானித்து வினவப்பட்டுள்ள 01 - 06 வரையுள்ள வினாக்களுக்கு விடைகளை எழுதுக.




1. சதுரத்தில் உள்ள இலக்கங்களைக் கொண்டு அமைக்கக்கூடிய மிகப் பெரிய எண்யாது?........................
2. செவ்வகத்தில் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆகக்கூடிய மிகச் சிறிய எண் யாது? ........................
3. முக்கோணியில் உள்ள எண் இரட்டை எண்ணா' ஒற்றை எண்ணா? ........................
4. அரைவட்டத்தில் இரு இலக்கங்களையும் கூட்டி உரோம எண்ணில் எழுதுக?........................
5. இங்குள்ள எல்லா இலக்கங்களையும் கூட்டினால் வரும் பெறுமானத்தை எழுத்தில் எழுதுக? ........................
6. முக்கோணி - 6 /சதுரம் - 15 /செவ்வகம் - 11 எனின் அரைவட்டம் எவ்வளவு? ........................

♦ 2) தரப்பட்ட உருக்களை அவதானித்து விடை தருக?








7. உரு A யில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பின்னத்தை எழுதுக? ........................
8. உரு A யில் நிழற்றப்படாத பகுதியின் பின்னத்தை தசம எண்ணில் எழுதுக? ........................
9. உரு B யில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பின்னம் யாது? ........................
10. உரு B யில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பின்னத்தை தசம எண்ணில் எழுதுக? ........................

♦ 3) ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக?

1. அன்னை :........................ 2. மழை:........................
3. வெளிச்சம் : ........................ 4. நீர் : ........................

♦ 4) கீழே உள்ள நீர்ப்பாத்திரத்தை அவதானித்து விடை தருக.




1. இப்பாத்திரத்தில் அரை லீற்றர் நீர் மட்டும் எஞ்சியிருக்க வேண்டு மெனின் வெளியில் எடுக்க வேண்டிய நீரின் அளவு யாது? .................... cm
2. பாத்திரத்தில் உள்ள நீர் 1 லீற்றர் ஆவதற்கு இன்னும் எவ்வளவு நீரைப் பாத்திரத்திற்கு ஊற்றவேண்டும்?....................




3. அருகிலுள்ள உருவில் காட்டப்பட்டுள்ளபடி கடலையின் நிறை யாது?

♦ 5) கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமாக அமையும் விடையை எழுதுக

1. கடல் : 450 /மடல் : 350/ எனின் கமல் :........................
2. மலிதி : 204/ இமை : 16 திறமை/ : 456 எனின் மைதிலி :........................
3. பாரதி : 432/ ரதிபா : 324 எனின் திரார் : ........................
4. 4, 9, 14, 19 ........................
5. 3, 9, 27 ........................

♦ 6) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக் களுக்கு விடை எழுதுக.


நாம் காட்டில் வளரும் தாவரங்கள். நாங்கள் யாரும் பயிரிடாமலே காட்டில் வளர்கின்றோம். இயற்கை அன்னையின் இருளால் நாம் எமக்குத் தேவையான வெளிச்சத்தையும் நீரையும் பெற்றுக் கொள்கின்றோம். காட்டில் வளர்ந்தாலும் நாட்டில் உள்ளவர்களுக்கு நாம் பயன்படுகிறோம். ஒவ்வொருவரும் பாதுகாப்புடன் வாழ வீடு கட்ட எம்மையே பெருமளவு பயன்படுத்துகின்றனர். மண் அரிப்பைத் தடுப்பதும் மழை வீழ்ச்சியை உண்டு பண்ணுவதும் நாமே. எம்மை அழிப்பதனால் நன்மைகளை விட தீமைகளே அதிகம். காடு வளமுடையதாயின் நாடு வளமுறும் என்பது சான்றோர் வாக்காகும்.

1. 'அன்னை' என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக? ........................
2. 'காடு' என்பதன் எதிர்கருத்துச் சொல்லை எழுதுக? ........................
3. மண்ணரிப்பு என்பதைப் பிரித்து எழுதுக? ........................
4. நன்மைகள் என்பதை ஒருமையில் எழுதுக? ........................
5. யாரும் பயிரிடாமல் காட்டில் வாழ்கிறோம் என்பதன் எழுவாய் எது? ........................
6. இந்தத் தாவரங்கள் காட்டில் வளர்ந்தாலும் எங்குள்ளவர்களுக்கு பயன்படுத்தப்படுகின்றன? ........................
7. நாங்கள் யாரும் பயிரிடாமலே காட்டில் வளர்கின்றோம் என்ற வாக்கியத்தின் செயப்படுபொருள் யாது? ........................

♦ 07) சரியான விடையின் கீழ்க் கோடு இடுக.

1. மண்ணினுள் வாழிடம் அமைத்து வாழும் பிராணி எது?
   1) செவ்வெறும்பு 2) கறையான் 3) முயல் 4) எலி
2. பின்வரும் பூச்சி இனங்களில் இருளான பிரதேசத்தில் மறைந்து வாழும் பூச்சி இனம் எது?
   1) அந்துப் = பூச்சி 2) வண்ணத்துப் = பூச்சி
   3) நெல் = ஈ 4) இராம = பான
3. காற்றின் மூலம் பரவிப் பெருகும் தாவரம் எது?
   1) நாயுருவி 2) துத்திரி 3) மஞ்சாடி 4) முருங்கை
4. வீட்டுத் தோட்டத்தில் முளைக்கும் புல் இனம் எது?
   1) கடுபுல் 2) தேங்காய் பூக்கோரை
   3) அறுகு 4) குப்பைமேனி
5. பின்வரும் உபகரணங்களில் கத்தியை தீட்டுவதற்குப் பயன்படும் உபகரணம் யாது?
   1) குறடு 2) துருத்தி 3) உளி 4) அரம்
6. பின்வரும் பூக்களில் விரைவாக வாடக்கூடிய பூ எது?
   1) கடதாசிப் பூ 2) மல்லிகை 3) அந்தூரியம் 4) அலரி
7. காணாமல் போன அடையாள அட்டை பற்றிய அறிக்கையைப் பதிவு செய்ய செல்ல வேண்டிய இடம் எது?
   1) மாவட்டச் செயலகம் 2) பொலிஸ் நிலையம்
   3) கிராம சேவகர் அலுவலகம் 4) பிரதேச சபை அலவலகம்

♦ 08) திண்மம் ஒன்றை தயாரிக்கக் கூடிய படித்தகடு (வெட்டுரு) ஒன்றின் மாதிரிகீழே வரிப்படமாக தரப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.




1. இப்படிக்கட்டின் சுற்றளவு யாது?........................cm
2. A,B இற்குகிடையிலான நீளம் யாது? ........................cm
3. இப்படிதகட்டை மடித்து ஒட்டிய பின் கிடைக்கும் திண்மம் யாது? ........................cm
4. தயாரிக்கப்பட்ட திண்மத்தின் எல்லா விளிம்புகளினதும் மொத்த (முழு) நீளம் யாது?........................cm
5. திண்மத்தின் முகம் ஒன்றின் பரப்பளவு யாது?.................... $cm^2$
6. தயாரிக்கப்பட்ட திண்மத்தின் m முகத்துக்கு எதிர்ப்பக்கம் எது? ........................
7. தயாரித்த திண்மத்தை கிடையான தளமொன்றின் மீது வைத்தால் அதற்கு இருக்கும் நிலைக்குத்து விளிம்புகள் எத்தனை?....................

ஆசிரியர் -
த. அம்பிகைபாகன்

விடைகள் - அடுத்தவாரம்.

### சென்றவார விடைகள்...

#### வினாத்தாள் I

(01) 2 (02) 1 (03) 2 (04) 3 (05) 2
(06) 2 (07) 3 (08) 2 (09) 3 (10) 2
(11) 3 (12) 4 (13) வயலின் (14) தம்புரா (15) வீணை
(16) ஊதுகொம்பு (17) 3 (18) 1 (19) 8
(20) 18,20 (21) ரூபா 50.00 (22) 20 (23) 0.5 (24) 45.00
(26) 2 27) 1 (28) 3 29) 2 30) 2
(31) லியாடோ டாவின்சி (32) மார்க் -1 33) கிரிஸ்
(34) பேராதனை (35) சீனி, உப்பு, குளோரின், சவக்ர்காரம்
(36) 1 (37) 4 (38) 5 (39) 5 (40) 4

#### வினாத்தாள் II

(01) தேன்உண்டு (02) வண்டு (03) வண்டுகள் (04) கிளி
(05) சிறிய மனிதன் புத்தியை (06) கருமை (07) கிளி/சின்னக்கிளி
(08) 1. பாட்டு/இசை 2.பழம் (09) 1. பெரிய 2.காய்
(10) வண்ண வண்ண (11) 2 (12) 3 (13) 2 (14) 1
(15) 2 (16) இருந்தனர் (17) நலமாக (18) கொட்டாவி
(19) உணவு (20) மேடை (21) Table (22) Teacher
(23) House (24) Mouth (25) Yellow colour (26) வணக்கம்
(27) ஆசிரியர் (28) கதிரை (29) வாழைப்பழம் (30) பால்
(31) 18,8,32,16 (32) 2/6 (33) ரூபா 6.00 (34) ரூபா 75.00
(35) 40 (36) 180 நிமி (37) ரூபா 20 (38)



(39) 24,28 (40) 2,4,6,8,10,12,14,16,18 (41) பிழை (42) சரி
(43) சரி (44) சரி (45) பிழை (46) சரி (47) சரி
(48) சரி (49) பிழை (50) சரி (51) தீதாள் (52) சுரம் (53) கவர்ச்சுத்தியல்
(54) மின்சூள் (55) சாய்தளம் (56) கல்லாரி (57) புறா (58) காட்டுக்கோழி
(59) அரிவாள் (60) கைவில்லை

கட்டுரை -தர்சினி மழைபெய்து முடியும் வரை கோயிலில் நிற்பதாக முடிவுசெய்தாள்/ அவளின் சிநேகிதி மைதிலி கோயில் வழிபாடு முடித்துக் கொண்டு குடையுடன் வந்தாள்/ தனது நண்பி தர்சினி குடை இல்லாமல் நிற்பதைக் கண்டு அவளையும் கூட்டிக்கொண்டு பஸ்தரிப்பிற்கு வந்தனர்./ பஸ்வண்டி வந்ததும் பஸ்ஸில் ஏறிக் கொண்டனர்./ பஸ்ஸிற்குள் தர்சினியின் அப்பா வேலை முடிந்து வந்தார்./ பஸ்ஸினுள் பயணம் செய்யும் போதும் மழை தொடர்ந்து பெய்தது./ தர்சினியும் அப்பாவும் தமது வீட்டு பஸ்தரிப்பு வந்ததும் பஸ்ஸில் இருந்து இறங்கிக் கொண்டனர்./ மைதிலி தனது வீட்டுத் தரிப்பிடத்திற்கு போய்க்கொண்டிருந்தாள்/ தர்சினியும் அப்பாவும் அப்பா கொண்டு வந்த குடையினுள் வீடு வந்து சேர்ந்தனர்./

# கௌரவமான உரிமைகளை போராடித்தான் பெறவேண்டும்!

## யாழ். பொது அமைப்புக்கள் ஒன்றியம்

யாழ்ப்பாணம் —

தொடர்ந்து நடத்தப்படும் தமிழினப் படுகொலைகள் - கௌரவமான சுதந்திர வாழ்வியல் உரிமைகளைத் தமிழ் மக்களாகிய நாம் போராடித்தான் பெறவேண்டும் என்பதை உறுதி செய்கிறது என யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கைப் படையினராலும், ஈ.பி.டி.பி. துணை இராணுவ ஒட்டுக் குழுவினராலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடுநிசியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் உட்பட மூவர் தமது வீட்டில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த போது அவர்களது வீட்டில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டதுடன், அவரது கணவரும், பிள்ளையும் படுகாயமடைந்து யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏதோ சமாதானத்தின்பால் கரிசனை கொண்டவர்கள்போல் அரிதாரமிட்டு, நாடகமாடும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான சிங்கள பௌத்த பேரினவாதத்தின் தமிழின அழிப்பு முன்னெடுப்புகளுக்கு இந்தக் கொடூர சம்பவங்கள் எடுத்துக் காட்டுக்களாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அநியாயமாகச் சிங்களப் படையினரால், தமிழ் மக்கள் பலியாக்கப்படுவதில் இருந்தும் தம்மைத் தாமே தற்காத்துக் கொள்வதற்கு வன்னிப் பிரதேசத்துக்குச் செல்வதே எமது பாதுகாப்புக்கான சிறந்த வழியாகும்.

சட்டத்தினதும், ஒழுங்கினதும் பேரால் தமிழ் மக்களது பாதுகாப்புக்குத் தாமே பொறுப்பு எனக் கூறிக் கொள்ளும் படையினரது அடாவடித்தனங்கள், அரசாங்கத்தினதும், படையினரதும், உயர் பீடத்தினால் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் தமிழ் மக்கள் மீதான போர்த் திணிப்புக்கான முதற்படிகளாகும்.


போர் நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக நிறைவேற்றுவதில் இருந்தும், இராணுவ நோக்கங்களுக்காகவே பின்னடிக்கும் அரசாங்கம், சமாதான வழியிலான அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்குத் தயாராக இல்லையென்பதைக் கடந்த சில மாதங்களாகப் படையினர் மேற்கொள்ளும் மிலேச்சத்தனமான கொலைவெறி அட்டூழியங்கள் தெளிவாக்குகின்றன.

சர்வதேச சமூகம் வெறுமனே பார்வையாளராகவிருந்து, அரச படைகளது அட்டூழியங்களையும், சிங்கள பௌத்த பேரினவாதத்தை நிலைநாட்ட முயலும் இலங்கை அரசாங்கத்தினது வஞ்சகப் போக்குகளையும் கண்டும் மௌனித்திருப்பதானது அவர்களது இன அழிப்புக் கொடூரங்களுக்கு துணை போவதாகவே அமைந்து விடுகிறது.

இந்தக் கட்டத்தில் தமிழ் மக்கள் தம்மைத்தாமே தற்காத்துக் கொள்வதற்கும், கௌரவத்தையும், சுதந்திரத்தையும் பேணுவதற்கும் மனித உரிமைகளின் பாற்பட்டதும் அடக்குமுறைக்கு எதிரானதுமான போராட்டங்களை முன்னெடுப்பது, வரலாற்றுத் தேவையாகிவிட்டது.

கௌரவத்துடனான சுதந்திர வாழ்வியல் உரிமைகளைத் தமிழ் மக்களாகிய நாம் - போராடித் தான் பெறவேண்டும் என்பது தெளிவாகியுள்ளது.

மிலேச்சத்தனமாக மேற்கொள்ளப்பட்ட இந்தப் படுகொலைகளுக்கு நாம் எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவிப்பதோடு, தமிழ் மக்கள் தமது கௌரவத்தையும், சுதந்திரத்தையும் மீட்பதற்கான அனைத்து வழிமுறைகளையும் கைக்கொள்வதற்குப் பின் நிற்கப்போவதில்லை என்பதை சர்வதேச சமூகத்துக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் ஓர் எச்சரிக்கையாக வலியுறுத்துகின்றோமென அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



சங்கானை —

அண்மையில் சித்தன்கேணி சுப்றா கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (29)

## ஓவியப் போட்டியில் வெற்றிபெற்றோர்

சுதுமலை —

தொழிற்துறை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அனுசரணையுடன் தேசிய உற்பத்தித்திறன் செயலகம் நடத்திய ஓவியப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

சமகால நிகழ்வுகளைப் பதிவு செய்யும் வகையில் பாடசாலைகள், பல்கலைக்கழகங்களுக்கிடையே தேசிய ரீதியில் இந்த ஓவியப் போட்டி நடத்தப்பட்டது.

பல்கலைக்கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக நான்காம் வருட மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

சித்திரமும் வடிவமைப்பும் துறையைச் சேர்ந்த ர.பிரகாஸ் (விசேட சித்தி), ப.கோகிலன், ச.சாரூபா ஆகிய மாணவர்களுக்கான சான்றிதழ்களும், பரிசில்களும் கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் வைத்துக் கடந்த புதன் கிழமை வழங்கப்பட்டது. (91)

## வடமராட்சி கடற்தொழிலாளர்களுக்கு இன்று வலைகள் வழங்கப்படவுள்ளன

சுதுமலை —

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பகுதியில் பத்துக் கிராமங்களிலுள்ள கடற்தொழிலாளர்களுக்கு கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் வலைத் தொகுதிகள் வழங்கப்படவுள்ளதாக நிறுவனத்தின் இயக்குநர் கி.யோ.ஜெயக்குமார் அடிகள் தெரிவித்தார்.

இன்று புதன்கிழமை தாளையடி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் வைத்து 112 வலைத் தொகுதிகள் வழங்கப்படவுள்ளன.

உடுத்துறை - 35, வத்திராயன் -26, கட்டைக்காடு - 19, ஆழியவளை - 31, மருதங்கேணி - 15, மாமுனை - 15, வெற்றிலைக்கேணி - 10, செம்பியன்பற்று - 9, தாளையடி - 6, சுண்டிக்குளம் - 13 என்ற அடிப்படையில் மேற்குறித்த கிராமங்களைச்சேர்ந்தகடற்தொழிலாளர்களுக்கே இந்த வலைத் தொகுதிகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை- ஏற்கனவே இவர்களுக்கு 187 கண்ணாடி இழைப் படகுகள், 187 வெளியிணைப்பு இயந்திரங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்தொழிலாளர்களின் ஜீவனோபாயத் தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளமையால் தொழில் ரீதியாக அவர்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்ப முடியுமெனவும், பெரும்பாலானோர் தொழில் செய்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (91)



சுதுமலை —

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான தையல் பயிற்சிக்கான அறிமுக நிகழ்வில்- பயிற்சியாளர் ஒருவருக்குத் தேசிய இளைஞர் பேரவை யாழ். மாவட்ட உத்தியோகத்தர் ஏ.சக்திவேல் மூலப்பொருட்கள் வழங்குவதைப் படத்தில் காணலாம். (91)

## தவறவிடப்பட்ட அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம் —

பல்வேறு இடங்களிலும் தவறவிடப்பட்ட தேசிய அடையாள அட்டைகள், விசேட அடையாள அட்டைகள் மற்றும் தொழில் அடையாள அட்டைகள் என ஒருதொகுதி அடையாள அட்டைகள் நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அதன் விபரங்கள் வருமாறு -

தேசிய அடையாள அட்டைகள் - ஆறுமுகம் லிங்கேஸ்வரி (பூநகரி), மகேந்திரன் ஹம்சானந்தி (அக்கராயன்குளம்), செல்வரட்ணம் பிரசாத் (நல்லூர்), வினாசித்தம்பி இராசமணி (உசன்), சிவலிங்கம் ரஜீவதாஸ் (வசாவிளான்), கதிரமலை சிங்கராஜா (களுவாஞ்சிக்குடி), செல்லத்தம்பி தருமலிங்கம் (ஊர்காவற்துறை).

விசேட அடையாள அட்டைகள் - பொன்னையா தம்பிராசா (உடுவில்), சிவபாலரட்ணம் தனபாலசிங்கம் (யாழ்ப்பாணம்), தேவகுமாரி மன்மதராஜா (கீரிமலை), சவிரி எஸ்தரம்மா (நாரந்தனை), பாலசுந்தரம் இராசமணி (எழுதுமட்டுவாள்), சின்னவன் வேலுப்பிள்ளை (சாவகச்சேரி).

கடற்படையால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் - சவிரி எஸ்தரம்மா (நாரந்தனை), சதஸ்னம் தெய்வேந்திரம் (சரவணை), கோபால் கமலராணி (அனலைதீவு), அமலானந்தன் யூட்கொலஸ்ரிகா (எழுவைதீவு).

பாடசாலை அடையாள அட்டை - தவகுலம் தர்சியா (ஆனைக்கோட்டை).

சாரதி அனுமதி அட்டை- ரட்ணம் மகேந்திரன் (கொழும்பு).

தொழில் அடையாள அட்டைகள் - நாகமுத்து தவராஜா (உரும்பிராய்), செல்லத்தம்பி தர்மலிங்கம் (வவுனியா), விமலசூரியா விமலதாசன் (வசாவிளான்), எஸ்.சிவஞானசேகரன்.

இவர்கள் அலுவலக நேரத்தில் வந்து உரிய ஆதாரங்களைக் காட்டி அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

## சிறு கைத்தொழில் முயற்சியாண்மை தொடர்பான பயிற்சிப் பட்டறை

சுதுமலை —

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் மணற்காடு கிராமத்தைச் சேர்ந்த 42 பெண்களுக்கு சிறு கைத்தொழில் முயற்சியாண்மை தொடர்பான மூன்று நாள் பயிற்சிப் பட்டறை இடம் பெற்றது.

மணற்காடு மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தில் இடம் பெற்ற சுயதொழில் தொடர்பான பயிற்சிச் செயலமர்வில் தேசிய கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் வளவியலாளர்களாகக் கலந்து கொண்டனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களில் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்கள், குடும்பத் தலைவிகளைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கே மேற்படி பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இதேவேளை - மேற்படி பயிற்சி பெற்றவர்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுயதொழில் முயற்சிக்கான கடன் கைத்தொழில் தொடர்பான பயிற்சிகளைத் தமக்கு மேற்படி நிறுவனம் வழங்கியுள்ளமையால் பாதிக்கப்பட்ட தாம் தொழில் ரீதியாக ஓரளவேனும் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியுமென பயனாளிகள் தெரிவித்தனர். (91)

## படையினரின் சோதனை; விவசாயிகளும் பாதிப்பு

வடமராட்சி —

வடமராட்சிப் பிரதேசத்தில் நெல் வயல்கள் மற்றும் விவசாய நிலங்களுக்குள் இறங்கிப் படையினர் சோதனை நடத்தி வருவதால் தமது பயிர்கள் அழிவடைவதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

வடமராட்சிப் பகுதியில் பிரதான வீதிகளின் அருகில் காணப்படும் நெல்வயல்கள், பயிர் நிலங்களுக்குள் ரோந்து செல்லும் படையினர் இறங்கி சோதனை நடத்தி வருகின்றமையால் இராணுவத்தினரின் சப்பாத்துக் கால்களால் மிதிபட்டு பயிர்கள் நாசமாகின்றன.

இது தொடர்பாக விவசாயி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் -

தற்போது வெங்காயம் பயிரிடப்படும் காலமாகும். எனவே, வீதியோரங்களில் காணப்படும் விவசாயக் காணிகளில் பெருமளவான வெங்காயப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகிறோம்.

ஆனால், அதற்குள் சோதனை என்ற பெயரில் இறங்கும் இராணுவத்தினர் தாறுமாறாகப் பயிர்களை மிதித்து நாசம் செய்கின்றனர். இதனால் அவர்களின் சப்பாத்துக் கால்களில் மிதிபட்டு, பயிர்கள் நாசமாகி வருகின்றமையால் எமக்குப் பெரு நஷ்டம் ஏற்பட்டு வருகிறது எனத் தெரிவித்தார். (14)

## முழுமை பெறாத நிலையில் சுனாமி வீட்டுத் திட்டங்கள்

சுதுமலை —

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென வீடமைப்புத் திட்டங்கள் பல முன்மொழியப்பட்டும், ஒரு வருடம் கடந்துவிட்ட நிலையில் 701 வீடுகளே நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுனாமி அனர்த்தத்தால் 5476 வீடுகள் பாதிக்கப்பட்ட போதும், இன்றுவரை 701 வீடுகளே அமைக்கப்பட்டுள்ளன. மருதங்கேணியில் 125 வீடுகளும், பருத்தித்துறையில் 576 வீடுகளுமே பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட 5476 வீடுகளில் - 4264 வீடுகள் முழுமையாகவும், 1182 வீடுகள் பகுதியாகவும் சேதமானதாகக் கணக்கிடப்பட்டுள்ளன.

4074 வீடுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைத்துக் கொடுப்பதற்கான ஒப்பந்தங்கள் அரச சார்பற்ற பொது அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சியில் கற்கோவளம், தும்பளைப் பகுதிகளில் அமைக்கப்பட்ட வீடுகள் முழுமை பெறாமல் கையளிக்கப்பட்டுள்ளதாகவும், நேரடியாக பாதிக்கப்பட்டவர்களில் சிலருக்கு வீடமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவில்லையெனவும் மக்கள் விசனம் தெரிவித்தனர்.

தமக்கென வழங்கப்பட்ட, வழங்கப்படவுள்ள நிரந்தர வீடுகள் - மழை நீர் தேங்கக் கூடிய தாழ்வான பகுதிகளிலேயே அமைக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி கிராமமக்கள் தெரிவித்தனர். (91)

# கிளிநொச்சி - புலிகளின்குரல் அமலன் அரங்கில்

# கேணல் கிட்டு நினைவாக முத்தமிழ் கலையரங்கம்

கிளிநொச்சி

இந்திய - இலங்கைக் கூட்டுச் சதியால் வங்கக் கடலில் வீர



காவியமான விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு நினைவு -முத்தமிழ்க் கலையரங்கம் புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வு - புலிகளின்குரல் அமலன் அரங்கில் நேற்றுமுன் தினம் காலை 10 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றிவைக்க, கேணல் கிட்டுவின் திருவுருவப்படத்துக்கான மலர்மாலையை நவம் அறிவுக் கூடப் பொறுப்பாளர் கலைக்கோன் அணிவித்தார்.

தொடர்ந்து, சங்கநாதம் கலைஞர்களின் முத்தமிழ் நடனம், வரவேற்பு நடனம் என்பன இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன் உரையாற்றுகையில் -

விடுதலைப் புலிகள் எப்படி ஊடகங்களை வளர்த்தெடுத்தார்கள், பயன்படுத்தினார்கள், அதில் மூத்த தளபதி கேணல் கிட்டுவின் செயற்பாடுகள் என்பது பற்றியும், புலிகளின் குரலின் ஒலிபரப்புப்பணி வானொலி மன்றங்களின் இயக்கம் முத்தமிழ் கலையரங்கங்கள் என்பன பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை புலிகளின்குரல் இசையமைப்பாளர் ப.சிறீவரதன் நிகழ்த்தினார். வானொலி மன்றங்களின் சார்பில் ஒய்வுபெற்ற உதவிக்கல்வி அதிகாரி க.சரவணபவன் நிகழ்த்தினார். தொடர்ந்து கேணல் கிட்டு சுற்றுக் கேடயத்தை 2005 ஆம் ஆண்டில் வென்ற மல்லாவி வானொலி மன்றத்துக்கு அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் வழங்கினார்.

மல்லாவி வானொலி மன்றத் தலைவர் சுபநேசன் கேணல் கிட்டு நினைவுக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து சிறப்புரையை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் நிகழ்த்தினார்.

கேணல் கிட்டு நினைவு முத்தமிழ் கலையரங்கம் - 2006 நிகழ்ச்சிக்கு உறுதுணை வழங்கிய தமிழீழ வைப்பகத்தின் மேலாளர் பாலகிருஸ்ணன் புலிகளின் குரல் பற்றிய மதிப்பீட்டைத் தெரிவித்தார்.

தொடர்ந்து புலிகளின்குரல் முத்தமிழ் கலையரங்கம் 2005 இல் தெரிவுசெய்யப்பட்ட கலைஞர்களுக்கும், வானொலி மன்றங்களில் தொடர்ந்து முனைப்புடன் செயலாற்றி வருபவர்களுக்கும், நாளாந்த அறிவியல் வினாடி வினாப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கப்பட்டன.

சான்றிதழ்கள், பரிசில்களை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், வணிகமன்றியத்தலைவர் வெற்றியரசன், லெப்.கேணல் குட்டிசிறி, மோட்டார் படையணி சிறப்புத்தளபதி கோபால், கடற்புலிகள் அணியின் மோகன், [illegible] தென்றல் வாணிபப் பொறுப்பாளர் சேரன், தமிழீழ வைப்பக மேலாளர் பாலகிருஸ்ணன், அனைத்துலக தொடர்பக நந்தவனம் பொறுப்பாளர் திலீபன், நவம் அறிவுக்கூடப் சிறப்புப் பொறுப்பாளர் தேவன், நவம் அறிவுக்கூட அதிபர் சிவா, வைத்திய கலாநிதி போராளி அஜந்தன் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

தொடர்ந்து முத்தமிழ்க் கலையரங்குகளில் சிறப்பு நிகழ்ச்சியாக சங்கநாதம் நிகழ்ச்சியை வழங்கும் பேபி ஆசிரியை குழுவினருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

முத்தமிழ் கலையரங்க நிகழ்ச்சிகள் பற்றி புலிகளின்குரல் கலைப்பிரிவு மேலாளர் பா.கபிலன், முத்தமிழ் கலையரங்க நிகழ்ச்சி மதிப்பீட்டாளர்கள் சார்பில் - புலிகளின்குரல் நிகழ்ச்சி மதிப்பீட்டு மேலாளர் ந.கோகுலன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

நன்றியுரையை புலிகளின் குரல் துணைப்பொறுப்பாளர் வி.செயல்வீரன் வழங்கினார்.

2000 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட புலிகளின்குரல் வானொலி மன்றங்கள் ஊடாக மக்களின் கலை வெளிப்பாடுகள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, புலிகளின் குரல் ஊடாக ஒலி பரப்பப்பட்டு வருவதுடன், மாதாந்தம் மன்றங்களின் கலை நிகழ்ச்சிகளின் அரங்கேற்றமாக முத்தமிழ் கலையரங்க நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த முத்தமிழ் கலையரங்கம் 2006 இல், 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற வானொலி மன்றங்களின் முத்தமிழ் கலையரங்க நிகழ்ச்சிகளில் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கு 15 சான்றிதழ்களும், பரிசில்களும், புலிகளின்குரல் நாளாந்த அவதானிப்புப் போட்டியில் தொடர்ந்து சரியான விடைகளை எழுதிய 29 பேருக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன.

புலிகளின்குரல் வானொலி மன்றங்களில் தொடர்ச்சியாக, தீவிரமாகச் செயற்பட்டு வருபவர்கள் 22 பேருக்கும் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

புலிகளின்குரலில் தற்போது மல்லாவி, விசுவமடு, வடமராட்சி கிழக்கு, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, முள்ளியவளை, வட்டக்கச்சி ஆகிய வானொலி மன்றங்கள் உள்ளன. இதுவரை 44 முத்தமிழ் கலையரங்க நிகழ்ச்சிகளும், 19 சிறப்பு முத்தமிழ் கலையரங்கு நிகழ்ச்சிகளுமாக, 63 முத்தமிழ் கலையரங்க நிகழ்ச்சிகள் வானொலி மன்றங்களிலும், நல்லூர் கந்தசாமி கோவில் திருவிழா காலங்களிலும் புலிகளின் குரலால் நடத்தப்பட்டன.

கேணல் கிட்டு நினைவாக நடத்தப்படுகின்ற புலிகளின் குரல் தொடர் ஒலிபரப்பில் முத்தமிழ் கலையரங்கம் நேரடியாக ஒலிபரப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## குடிநீர் வசதி

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்துக்கான குடிநீர் வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் நிதி உதவியுடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பணியை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்துக்கமைய கிளிநொச்சி மாவட்டத்தில் பாரிய நீர்த் தாங்கியும், நீர் பெறுவதற்கான ஆழ் கிணறுகளும் அமைக்கப்பட்டிருப்பதால், மக்கள் குடிநீரை இலகுவில் பெற்றுக் கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கண்ணிவெடி அகற்றும் மின்கலங்கள் காணாமல் போயின!

வவுனியா

வவுனியாப் பிரதேசத்தில் வெடிபொருட்களை அகற்றும் பணிகளில் ஈடுபட்டுவரும் அமைப்பொன்றின் பொருட்கள் காணாமற்போயுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாகச் செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெடிபொருட்களை அடையாளம் காண்பதற்காகப் பயன்படுத்தப்படும் மின்கலங்களே பெருமளவில் காணாமற்போயுள்ளன. குறித்த மின்கலங்களை சாதாரண மக்கள் தமது வழமையான பயன்பாட்டுக்கு உபயோகிக்க முடியாதென வெடிபொருள் அகற்றும் அமைப்பினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

## நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும்

மன்னார்

மன்னார் மாவட்ட ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் மன்னார் நகரசபை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் - தலைவராக வைத்தியகலாநிதி ஏ.அரசக்கோனும், செயலாளராக வைத்திய கலாநிதி எஸ்.லோகநாதனும், பொருளாளராக வைத்திய கலாநிதி எஸ்.செல்வமகேந்திரனும், சிரேஷ்ட உபதலைவர்களாக வைத்திய கலாநிதி எஸ். ரி.பாலரட்ணம், வைத்தியர் ச.சவிரிமுத்து, உபசெயலாளராக வைத்திய கலாநிதி இந்துமதி, நிர்வாக உறுப்பினர்களாக வைத்தியர்களான வீ.ஏ.கிறிஸ்ரி ரவிச்சந்திரன், பி.அன்ரனி, பி.மோசஸ், ஆர்.நடராஜன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## யோகர் சுவாமி திருவடி நிலையத்தில் சுகாதாரப் பயிற்சிப் பட்டறை நிகழ்வு!

வன்னேரிக்குளம்

வன்னேரிக்குளம் யோகர் சுவாமிகள் திருவடி நிலையம் நடத்தும் முதியோர் இல்ல பயனாளிகள், ஊழியர்களுக்கான சுகாதாரப் பயிற்சிப் பட்டறை அண்மையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர். ரி.சத்தியமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - முதியோர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், மருத்துவ சுகாதார ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

வரவேற்புரையை முதியோர் இல்லத்தலைவர் பொன்.நித்தியானந்தன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி தனது உரையில் -

இந்த முதியோர் இல்லத்தில் மரக்கறி உணவுகள் மட்டுமே வழங்கப்படுகிறது. இந்த உணவுகள் வழங்குவதன் நோக்கம் யோகர் சுவாமிகள் நிலையம் என்பதனாலும், இந்த உணவில் தான் முதியோருக்குப் பெரும் நன்மை உள்ளது என்பதாலும், இவர்கள் இந்த வகை உணவு உட்கொள்வதுதான் பொருத்தமானதுமாகும். அத்துடன், கொலஸ்ரோலினால் ஏற்படும் விளைகளிலிருந்துபாதுகாத்துக் கொள்ளவும் முடிகிறது என்றார்.

தொடர்ந்து வைத்திய கலாநிதி சிவதாசனினால் முதியோர்களுக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டு, ஆலோசனையும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நன்றியுரையை முதியோர் இல்லச் செயலாளர் டொக்டர்.ச. முருகானந்தன் வழங்கினார்.

(வ)

## கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் கடற்தொழிலாளருக்கு வலைகள்

முல்லைத்தீவு

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு கடற்தொழிலாளர்களுக்கு வலைத் தொகுதிகள் வழங்கப்படவுள்ளதாக நிறுவனத்தின் இயக்குநர் கி.யோ.ஜெயக்குமார் அடிகள் தெரிவித்தார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை, முல்லைத்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஊடாக 21 கிராமங்களைச் சேர்ந்த கடற்தொழிலாளர்களுக்கு 200 வலைத் தொகுதிப் பொதிகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை பாதிக்கப்பட்ட இந்தக் கடற்தொழிலாளர்களுக்கு இதுவரை 200 கண்ணாடி இழைப்படகுகளுடன் 200 வெளியிணைப்பு இயந்திரங்களையும் வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(91)

## கேணல் கிட்டு நினைவுநாளையொட்டி பன்ன வேலை உற்பத்திக் கண்காட்சி

கிளிநொச்சி

தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் 13 ஆவது ஆண்டு நினைவு நாளையொட்டி, பனை வேலை உற்பத்திப் பொருட் கண்காட்சி - கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் காலை 11.30 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், முதன்மைச் சுடரை கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி ஆனந்தராஜா ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியைத் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஏற்றிவைத்தார்.



கேணல் கிட்டுவின் உருவப்படத்துக்குச் சுடரேற்றி மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

பனை வேலை உற்பத்திப் பொருள் மண்டபத்தைத் தமிழீழ அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நாடாவைவெட்டி, கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

இதேவேளை -மூத்த தளபதி கிட்டு வரைந்த ஓவியங்களின் கண்காட்சி, கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரியில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டு, நேற்றும் இந்த நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

கிளிநொச்சி

உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் அமரர் தியாகராஜா ஞாபகார்த்தமாக உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி நாளை ஆரம்பமாகவுள்ளது.

உருத்திரபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள இந்தச் சுற்றுப் போட்டியில் 29 அணிகள் பங்கேற்கவுள்ளன.

இந்தப் போட்டியானது - காலை 8 மணிக்கு ஆரம்பமாகி, மலைவரை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் அணிகள் நேரத்தைக் கருத்தில் கொள்ளுமாறும், இந்தப் போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள தெரிவித்தனர்.

(09)

நமது ஈழநாடு

வைர வரிகள்

அருங்கேடன் என்பது அறிக மருங்குஓடித்
தீவினை செய்யான் எனின்.

- திருக்குறள் -

## நமது நோக்கு

# கொடூரக் கொலைகள்!

மானிப்பாயில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்களான - தாய் மற்றும் இரு மகள்களைக் கொடூரமாகச் சுட்டுக் கொன்று - தந்தை மற்றும் மகனைப் படுகாயப்படுத்திய சம்பவம் யாழ். குடாநாட்டையே அதிர்ச்சியில் உறைய வைத்திருக்கிறது.

அங்கொன்றும் - இங்கொன்றுமாக இடம் பெற்று வந்த கொலைகள் இப்போது விஸ்வரூபம் எடுத்திருப்பதை இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டியிருக்கிறது.

இனி அடுத்து என்ன நடக்குமோ? யாருக்கு இந்த நிலை ஏற்படுமோ என்ற ஏக்கம் ஒவ்வொருவரது மனதிலும் எழுந்திருக்கிறது. குடும்பமாகக் கொன்று குவிக்கும் அளவுக்கு கொடூரத்தனமான திட்டமிடல்கள் யாழ்ப்பாணத்தில் நடந்து கொண்டிருப்பதை நினைத்தே பார்க்க முடியாமலிருக்கிறது.

அமைதியாக இருந்த யாழ். குடாநாடு - நீர்வேலியில் மூன்று அப்பாவி இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட பின்னர்தான் இப்படிப்பட்ட கொதிநிலைக்குள் காலடியெடுத்து வைத்தது.

ஏதோ நாளுக்கு ஒன்று என்ற கணக்கிலிருந்த கொலைகள் இரண்டாகி - மூன்றாகி - எட்டாகிவிடும் அளவுக்கு நிலைமை மோசமடைந்திருக்கிறது.

ஒரு புறத்தில் நேரடி இராணுவ வன்முறைகள் அதிகரித்துவருவதால் குடாநாட்டை விட்டுப் பெருமளவான மக்கள் இடம்பெயரத் தொடங்கியிருக்கும் நிலையில் - அதே தரப்பின் மறைமுக நடவடிக்கைகளால் அப்பாவிப் பொது மக்கள் அநியாயமாகப் பலியெடுக்கப்படும் அவலம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

குடும்பத்தோடு கொன்று குவிக்கும் அளவுக்கு இவர்கள் என்னதான் குற்றம் செய்தார்கள்? - அப்ப டிக் குற்றம் செய்திருந்தால் சட்ட ரீதியாக நிரூபிக்கத் திராணியற்ற சக்திகள் தான் - கறுப்பு உடைகளில் முகமூடிகளுடன், வெள்ளை வானில் வந்து இப்படிப்பட்ட கொடூரங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றன.

ஏற்கனவே டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணியாற்றும் இரண்டு இளைஞர்கள் பருத்தித்துறை ஓடைக்கரை வீதியில் வைத்து - வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டிருந்தனர். இப்போது வெள்ளை வானில் வந்த ஆயுதபாணிகள்தான் மானிப்பாயிலும் கொடூரத்தனம் புரிந்திருக்கிறார்கள்.

இத்தகைய சம்பவங்கள் நிச்சயம் அரசபடைத் தரப்புக்குத் தெரியாமலோ அல்லது அவர்களின் ஆசி இல்லாமலோ நடைபெறுகிறது என்று கூறி விட முடியாது. ஏனென்றால் நள்ளிரவில் சாதாரண மக்கள் நடமாடினாலே சுட்டுக் கொல்லப்படும் நிலை இருக்கும்போது -

வெள்ளை வானில் 9 ஆயுதம் தாங்கிய நபர்கள் வந்து தாக்குதல் நடத்தியிருப்பது எப்படி?

சாதாரணமாக எங்காவது வெடிச் சத்தம் கேட் டாலே ஓடி வந்து சுற்றிவளைத்து கண்டபடி தாக்கு தல் நடத்தும் படையினர், இந்தக் கொடூரம் புரிந்தவர்கள் வானில் தப்பிக்கும் அளவுக்கு கண்ணை மூடிக்கொண்டிருந்தது எப்படி?

இராணுவ நடமாட்டம் அதிகமாகவுள்ள இடத்தில் நடந்தேறியிருக்கும் இந்தக் கொடூரம் குடாநாட்டை மேலும் அச்சத்தின் பிடியில் சிக்கவைத்திருக்கிறது.

1980 களின் நடுப்பகுதியிலும், 1996 / 97 காலப் பகுதியிலும் இது போன்ற நிலைதான் காணப்பட்டது. கொலைகள், கைதுகள், காணாமற்போகும் சம்பவங்கள் எல்லாமே சர்வ சாதாரணமானவையாகி விட்டன.

அவசர காலச் சட்டம் கொடுத்த வரம்புக்கு மீறிய அதிகாரங்கள், அரசியல் ரீதியாக தமிழின அழிப்பு நடவடிக்கைக்குக் கொடுக்கப்படும் ஆதரவு என்பன இந்தச் சம்பவங்களை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்து கொண்டே போகிறது.


இத்தகைய நிலை தொடர்ந்து நீடித்தால் மிக விரைவில் குடாநாட்டில் உயிர் வாழ்வோரின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துவிடும் என்பது மட்டுமன்றி யாழ்ப்பாணத்தையே சுடுகாடாகவும் மாற்றிவிடும்.

இதைத்தான் இந்த சக்திகள் விரும்புகின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எழுச்சி கொண்ட மக்களைப் படுகொலைகள் மூலம் அச்சுறுத்திப் பணிய வைப்பதற்கான ஒரு உபாயமாகவே இதைக் கருதவேண்டியிருக்கிறது.

இத்தகைய படுகொலைகளின் ஊடாகத் தமிழ்த் தேசியத்தைப் பலவீனப்படுத்த எடுக்கப்படும் முயற்சிகள் நிச்சயம் வெற்றி பெறாது. ஏனெனில் இப்படிப்பட்ட சம்பவங்கள் குடாநாட்டு மக்கள் மத்தியில் எதிர் மறையான விளைவுகளையும் - எண்ணங்களையும் தான் ஏற்படுத்தியிருக்கின்றன. ஏற்படுத் திக் கொண்டிருக்கின்றன என்பதில் சந்தேகமே இல்லை.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




# புலிகளின் எந்தவொரு தாக்குதலையும் முறியடிக்கும் நிலையில் கடற்படையினர்

## கடற்படைத் தளபதி தெரிவிப்பு



கொழும்பு

மன்னார், திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்தில் கடற்படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டாலும், கடற்படையினரின் மனநிலை உயர்வாகவே உள்ளதென கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொட தெரிவித்தார்.

கடற்படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை அடுத்து, கடற்படையினரின் முகாம்களுக்கு விஜயம் செய்த கடற்படைத் தளபதி, தனது விஜயம் தொடர்பாகக் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

கடற்படைமுகாம்களுக்கான எனது விஜயத்தின்போது கடற்படையினரின் மனோ வலிமை உயர்வாக உள்ளதுடன், எதனையும் எதிர்கொண்டு முறியடிக்கும் ஆற்றலுடன் உள்ளதனை அவதானித்தேன்.

விடுதலைப் புலிகளின் தந்திரோபாயங்களை உன்னிப்பாக அவதானித்துவரும் கடற்படையினர் அவர்களது எந்தவொரு தாக்குதல்களையும் முறியடிக்கும் நிலையில் உள்ளனர்.

போர்நிறுத்த உடன்படிக்கையின்படி கடற்படையினரின் தளங்களைச் சூழவுள்ள பகுதிகளில் மீன்பிடிப்பதற்கு எவருக்கும் அனுமதியில்லை. எனினும், கடற்படையினர் மனிதாபிமான அடிப்படையில் இந்தப் பகுதிகளில் மீன்பிடிக்க அனுமதியளித்தனர். ஆனால், விடுதலைப்புலிகள் மீனவர்களை கேடயமாகப் பயன்படுத்தி, கடற்படையினர்மீது தாக்குதல்களை நடத்தினர்.

எனவே, போர்நிறுத்த உடன்படிக்கையின்படி கடுமையாக நடப்பதென கடற்படை தீர்மானித்தது. இதனால் வட-கிழக்கிலுள்ள கடற்படைத் தளங்களை சூழவுள்ள பகுதிகளில் மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டது.

எனினும், இந்த நடைமுறையால் வறுமைக் கோட்டில் வாழும் மீனவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

# பொங்குதமிழ் நிகழ்வின் 5 ஆவது ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம்

யாழ். பல்கலைக்கழகத்தில் பொங்குதமிழ் நிகழ்வின் ஐந்தாண்டு நிறைவுதின நிகழ்வுகள் நேற்று பகல் 11 மணிக்கு பல்கலைக்கழக மாணவர் பொது அறை மண்டபத்துக்கு அருகிலுள்ள பொங்குதமிழ் நிகழ்ச்சி நினைவு பெயர்ப்பலகை நாட்டப்பட்டுள்ள இடத்தில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மாணவன் பகிர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பொதுச்சுடரை வணிகத்துறைப் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராசா ஏற்றிவைத்தார். நினைவுப் பெயர்ப்பலகைக்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் மலர்மாலை அணிவித்தார்.

இதனைத் தொடாந்து தமிழீழத் தேசியக் கொடியைப் பல்கலைக்கழக மாணவன் பகிர் ஏற்றிவைத்தார். தொடர்ந்து கூட்டம் இடம்பெற்றது. இதில் பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸும், மாணவர் சார்பில் பகிரும் உரையாற்றினர்.

# ஒன்பது நீர்ப்பாசனக் குளங்கள் வடக்கு – கிழக்கில் புனரமைப்பு

யாழ்ப்பாணம்

வடக்கு - கிழக்கில் உள்ள ஒன்பது பாரிய நீர்ப்பாசனக் குளங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக மாகாண பிரதம செயலாளர் ஆர். ரங்கநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த நீர்ப்பாசனக் குளங்களை புனரமைப்பதற்காக ஜப்பான் சர்வதேச அபிவிருத்தி வங்கி 812 மில்லியன் ரூபாவை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கியிருப்பதாகவும், புனரமைப்பு வேலைகள் மூன்று ஆண்டுக்குள் முடியுமெனவும் மாகாண செயலாளர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய 7 மாவட்டங்களில் 6081 ஹெக்டெயர் நெற்காணிகள் புனரமைப்பதன் மூலம் நன்மையடையவுள்ளன. புனரமைப்பு திட்டம் இந்தப் பெரும்போக நெற்செய்கை முடிந்தவுடன் ஆரம்பமாகும்.

இந்தத் திட்டம் தொடர்பாகத் திட்ட முகாமைத்துவ காரியா லயம் திருகோணமலையில் அமைந்துள்ளதுடன், புனரமைப்புக்கான கள ஆய்வுகள் முற்றுப்பெற்றுள்ளதாகவும், இந்தக் குளப் புனரமைப்பு நிறைவு பெற்றதும், விவசாயிகளின் வருமானத்தில் மாற்றம் ஏற்படுவதுடன், மக்களது வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்பட்டுவிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புத்தகங்கள் அன்பளிப்பு

நெல்லியடி

கரவெட்டி மாணிக்கவாசகர் தமிழ் வித்தியாலய நூல் நிலையத்துக்கு கல்வியமைச்சு பெறுமதி மிக்க புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அண்மையில் இந்தப் பாடசாலை அதிபர் எஸ்.இராகவனிடம் வலயப் பணிப்பாளர் மேற்படி புத்தகங்களைக் கையளித்தார். தரமான சிறந்த புத்தகங்கள் கிடைக்கப் பெற்றமையால், மாணவர்களின் அறிவும், ஆற்றலும் வளரப் பெரிதும் துணை புரியுமென தெரிவிக்கப்படுகிறது.

(13)

# பொற்பதி கிராமத்தில் தையல் பயிற்சி வகுப்பு

சுதுமலை

கியுடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட பொற்பதிக் கிராம மக்களுக்கு தையல் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முதற்கட்டமாக ஆறுமாத காலப் பயிற்சிகள் 15 பெண்களுக்கு வழங்கப்படவுள்ளது. பயிற்சி நெறிக்கான அறிமுக நிகழ்வில் பயிற்சிக்கான மூலப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

பெண்களைக் குடும்பத் தலைவர்களாகக் கொண்டவர்களுக்கும், வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களுக்குமே இந்த தையல் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுயதொழில் முயற்சிக்கான பயிற்சிகளை பெறுவதன் மூலமாகத் தாம் சுயமாக இயங்க பெரும் வாய்ப்பாக அமையுமெனப் பயிற்சியாளர்கள் தெரிவித்தனர்.

(91)

# ராஜபக்ஷ பதவியேற்ற நாள் முதல் ஈழம் பற்றி எரிகின்றது...!

**மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயம் குறித்து-தமிழகத்தின் பிரபல பத்திரிகையாளர் சோலை- குமுதம் றிப்போட்டர் 15.01.2006 இதழில் எழுதிய இலங்கைக்கு மன்மோகன்சிங் சொன்ன புத்திமதி என்ற கட்டுரை இது.**



இலங்கை ஜனாதிபதி மகிந்த இந்தியத் தலைநகருக்கு வருகை தந்தார். அவருடைய வருகை இலங்கைக்கு எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை.

இலங்கை அரசுக்கும்- ஈழ விடுதலை இயக்கத்துக்கும் போர் நிறுத்த உடன்பாடு காண, நோர்வே நன்முயற்சி எடுத்தது. ஆனால், அதன் பணிகள் இன்று வரை சிங்கள இனவாதிகளுக்குத் திருப்தி தரவில்லை. எனவே, பேச்சுவார்த்தையில் இந்தியாவை இழுத்து விட விரும்பினார். பிரதமர் மன்மோகன்சிங் இலங்கை அரசின் இந்த யோசனையை ஏற்கவில்லை. நல்ல காரியம்.

நோர்வே நாட்டுடன் ஜப்பான், ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளையும் இணைத்து விடுகிறோம் என்று இலங்கை அரசு கூறுகிறது. அதனையும் பிரதமர் மன்மோகன்சிங் ஏற்கவில்லை. ஈழ விடுதலை இயக்கத்துடன் பேச்சுவார்த்தையைத் தொடங்குங்கள் என்று கூறியிருக்கிறார். நோர்வே நாட்டை நடுநாயகமாக வைத்துத்தான் பேச்சுவார்த்தை தொடரமுடியும்.

ஈழத்தில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற போர்ச் சூழலுக்கு, ஈழ விடுதலை இயக்கம் தான் காரணம் என்று இந்தியா குற்றம் சாட்ட வேண்டும் என்று சிங்கள இனவாதிகளும், அவர்களுடைய ஆதரவாளர்களும் துடியாய்த் துடித்தனர். கூட்டறிக்கையில் அப்படிக் குறிப்பிடப்படவில்லை. அவர்களுக்கு ஏமாற்றம்தான்.

இந்தியா வந்த இலங்கை ஜனாதிபதி தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவைச் சந்திப்பார் என்று அறிவிக்கப்பட்டது. காரணம், ஈழப் பிரச்சினையில் நமது முதல்வரின் நிலை நாடறிந்ததுதான்.

ஆனால், தமிழக முதல்வருக்கு வேறு பணிகள் இருப்பதால், இந்தச் சந்திப்புச் சாத்தியமில்லை என்று டெல்கியில் அறிவித்தனர். இன்னும் சில மாதங்களில் சட்டமன்றத் தேர்தலைத் தமிழகம் சந்திக்கப் போகின்ற நிலையில், எப்படி இந்தச் சந்திப்பு நடைபெறும் என்று எண்ணிப் பார்க்க மறந்து விட்டனர்.

எனவே, இலங்கை ஜனாதிபதியின் இந்தியப் பயணம் எல்லா வகையிலும் தோல்வியைத் தான் சந்தித்தது.

இன்றைக்கு ஈழத்தில் என்ன நடைபெறுகிறது? ராஜபக்ஷ பரிபாலனம் செய்ய வந்த நாள் முதலாய் ஈழம் எரிந்து கொண்டிருக்கிறது. அநியாயத்தைத் தட்டிக் கேட்டால் ராணுவம் துப்பாக்கி தூக்குகிறது.

யாழ்.புங்குடுதீவைச் சேர்ந்த தர்சினி இலங்கைக் கடற்படையினரால் கடத்தப்பட்டார். கற்பழிக்கப்பட்டார். படுகொலை செய்யப்பட்டார். ஈழ மாணவர்கள் குமுறி எழுந்தனர். யாழ் நகர மாணவர்களோடு இராணுவம் மோதிப் பார்த்தது. பத்து ஆண்டுகளுக்குப் பின்னர், பல்கலைக்கழகவளாகத்தினுள் இலங்கை இராணுவம் நுழைந்திருக்கிறது.

ஈழத் தமிழர்களுக்காகத் தொடர்ந்து போராடி வந்தவர் - நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம். அவர் மட்டக்களப்பு தேவாலயத்தில் பிரார்த்தனை செய்து கொண்டிருந்த போது, சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தப் படுகொலைக்குப் பின்னால் இலங்கை இராணுவமும், அதன் சூத்திரப் பாவைகளும் இருக்கிறார்கள் என்பதனை ஈழமக்கள் அறிவார்கள்.

குறிபார்க்காது சுடுவதைப் போல, விளைவுகளை எண்ணிப் பார்க்காது ஈழ அரசும், இராணுவமும் செயற்படுகின்றன.

அந்த இராணுவம் யாழ். அருகில் உள்ள பலாலி விமான நிலையத்தைப் பயன்படுத்துகிறது. ஈழ விடுதலை இயக்கத்தினரின் தாக்குதலால் பலாலி பாழாகி இருந்தது. அந்த விமான நிலையத்தை இந்தியா புதுப்பித்துத் தந்திருக்கிறது.

இந்த விமான நிலையத்திலிருந்து பறந்த இலங்கை இராணுவ விமானங்கள், எத்தனை ஆயிரம் ஈழத் தமிழர்களைப் பலிகொண்டிருக்கின்றன? போர் நிறுத்தத்தை மீறிச்செயற்படும் அரசுக்கு, இத்தகைய உதவிகள் அளிப்பதென்பது, கள் குடித்த குரங்கு கையில் தீப்பந்தத்தைக் கொடுப்பதற்குச் சமமாகும்.

சென்ற மாதம் இலங்கை - இந்திய கடற்படையின் கூட்டுப் பயிற்சியும் நடைபெற்றிருக்கின்றன.

இந்த நிகழ்வுகளை இங்குள்ள தமிழர்கள் கவலையோடு காண்கிறார்கள். இந்தியா அளிக்கும் இத்தகைய உதவிகளை சர்வதேச அரங்கில், இலங்கை எப்படி எடுத்துக் கூறும்? ஈழ மக்கள் மீது தொடுக்கும் அநியாய யுத்தத்துக்கு, இந்தியா ஆதரவாக நிற்கிறது என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்காதா?

இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம், இலங்கை அரசுக்குச் சாதகமான காரியங்களைச் செய்வதாகத் தகவல்கள் வருகின்றன.

ஈழ விடுதலை இயக்கத்தின் செய்தித் தொடர்பாளர் தமிழ்ச் செல்வனை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் சந்தித்துப் பேசினார். உடனே, இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை அவர் சந்திக்க இந்தியத் தூதர் நிருபமா ஏற்பாடு செய்ததாகச் செய்திகள் வருகின்றன.

இதற்கு முன்னர், எப்படிச் செயற்பட்டிருந்தாலும், இலங்கை ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர், இந்திய அரசு எச்சரிக்கையோடு செயற்படுகிறது. பிரதமர் மன்மோகன்சிங் அளந்து அடியெடுத்து வைக்கிறார். ஈழத்தமிழர்களுக்கு எதிராகச் செயற்பட்டோம் என்ற எண்ணம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் விழிப்போடு இருக்கிறார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், இந்தியாவுடன் கூட்டுப் பாதுகாப்பு உடன்பாடு காண இலங்கை முயற்சித்தது. அந்த முயற்சியை முறியடித்ததில் மறுமலர்ச்சி தி.மு.கழகத் தலைவர் வைகோவுக்குப் பெரும் பங்கு உண்டு.

அப்படி ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்? முழுக்க முழுக்க சிங்கள இனவாதம் முடிசூட்டிக் கொண்டிருக்கின்ற நிலையில், ஈழம் எரிந்து சாம்பலாகி இருக்கும்.

இலங்கைக் ஜனாதிபதித் தேர்தலின்போது, ராஜபக்ஷ என்ன சொன்னார்? 'இலங்கை ஒரே நாடு. அதற்குள்ளே எந்த சுயாட்சிக்கும் இடமில்லை' என்றார். சிங்கள இனவெறியர்களின் இதயத்தைத் தடவிக் கொடுக்க எந்த அளவுக்கு ஈழத் தமிழர்களுக்கு எதிராக அனல் கக்க முடியுமோ, அந்த அளவுக்குக் கக்கினார். 'ஆனால், இந்திய அரசியல் அமைப்பைப் போல் இலங்கையிலும் ஏற்பாடு செய்வோம்' என்று அப்போது சொன்னார்.


தேர்தல் பிரசாரத்தின்போது அவர் முன்வைத்த முழக்கங்களை இப்போது வெற்று வேட்டு என்று அவர் ஒப்புக் கொள்ளத் தயாரா?

கொழும்பு நகரில் வாழும் ஒவ்வொரு தமிழ்க் குடும்பத்துக்குள்ளும் இலங்கை இராணுவமும், காவல்துறையும் நுழைகிறதே ஏன்? ஏறத்தாழ ஆயிரம் தமிழ் இளைஞர்களை அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அவர்களில் எத்தனை பேர் உயிரோடு திரும்புவர்?

இந்த நிலையில் எப்படியாவது இந்திய இராணுவத்தை ஈழத்து மண்ணில் இறக்க, இலங்கை பெரும்பாடுபடு கிறது. அதற்காகக் கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம் என்கிறது. நியாயம் பேசும் நோர்வேயைப் புறந்தள்ளி, இந்தியாவை மோத விடப் பார்க்கிறது. இலங்கையின் இந்த ஆலோசனைகளை பிரதமர் மன்மோகன்சிங் புறந்தள்ளியிருக்கிறார். ஈழத் தமிழர்களோடு இரத்த உறவுள்ள இங்குள்ள தமிழர்கள், பிரதமர் எடுத்துள்ள நிலையை வரவேற்கிறார்கள். பாராட்டுகிறார்கள்.

**- சோலை-**

# கொடுமைகள் குதறி எறிந்து குனிந்த தலை நிமிரும்...!



இலங்கைத் தீவில் தற்போதிருக்கும் நிலைமை தமிழரை ஆயுத முனையில் அடக்குவதற்கும், அழிப்பதற்குமான நடவடிக்கைகளை புதிய வடிவில் பேரினவாதிகள் முடுக்கி விட்டுள்ளதாகவே தெரிகிறது.

இலங்கைத் தீவை விட்டு அந்நியர் வெளியேறிய காலம் தொடக்கம், ஈழத்தமிழரை அழித்தொழிப்பதே தமது கடமையெனப் பேரினவாதிகள் செயற்பட்டு வந்தனர். காலத்துக்குக் காலம் இது வேறுபட்ட செயற்பாடுகளைக் கொண்டதாக அமைந்திருந்தது.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுவி தமிழர் தாயகப் பிரதேசங்களுக்குள் செல்வதற்குத் விதித்து தமிழர் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த நிலப் பிரதேசங்களில் அவர்களைப் படுகொலை செய்து, விரட்டியடித்து, அந்த இடங்களை சிங்கள மயமாக்கியது.

இது ஒரு காலகட்டத்தில் தொடர்கதையானது. இதே போன்று கல்வி, பண்பாடு, பொருளாதாரம், தொழில் எனத் தமிழரின் அனைத்துச் செயற்பாடுகளிலும் கைவைப்பதன் மூலம் ஈழத்தமிழரை அழிக்கலாமென கண்ணும் கருத்துமாக மிகவும் மோசமாக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டனர். விளைவு- தமிழர் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ளவே கைகளில் ஆயுத மேந்தினர்.

தமிழரின் ஆயுதப் போராட்டத்தைச் சிங்கள பேரினவாதிகள் கோழிமுட்டையை நசுக்குவது போல நசுக்கி விடலாமென எண்ணினர். அந்த எண்ணத்துடன் காய்களை நகர்த்தினர்.

இது மலையுடன் தலையை மோதும் விதமான செயற்பாடென உள்ளூர உணர்ந்த போதும், வெளிப்படையாக வேறொரு திட்டத்தைப் போட்டார்கள். போராட ஆயுதமேந்தியவர்களை மக்களிடமிருந்து பிரித்து விட்டால் இனஅழிப்பு வெற்றியடையும் என்பதே அந்தத் திட்டமாகும்.

இது நிறைவேற்ற முயற்சிக்கப்படுமானால் தமிழர் கொன்று குவிக்கப்படுவர் என்பது திட்டத்தை போட்டவர்கள் அறியாதவொன்றல்ல. அழியப்போவது தமிழர்தானே என எண்ணி தொடர்ச்சியாக நிராயுதபாணிகளாக இருக்கும் தமிழரை இலக்கு வைத்து, மூர்க்கத்தனமாக - தமிழர் ஒரு மனித இனமென்ற எண்ணம் துளியளவும் இல்லாமல் தொடர்ச்சியான படுகொலைகள் வடக்கு - கிழக்கில் இடம்பெற்று வருகின்றன.

கொக்கட்டிச்சோலை, புல்லுமலை, குமாரபுரம், திரியாய், தென்னமரவடி, கஞ்சிகுடிச்சாறு, ஒதியமலை, உயிலங்குளம், செட்டிக்குளம், வவுனியாநகர், மானிப்பாய், குமுதினிப் படகில் என ஏராளம் படுகொலை களை- அது ஒரு நீண்ட பட்டியலிடக் கூடியது.

தொடர்ச்சியாக மக்களை படுகொலை செய்தபோதும் போராட்டத்தின் கருவை அழிக்க முடியவில்லை.

அடுத்த மிக முக்கிய இன அழிப்புத்திட்டமாக தொடர்ச்சியான படைநகர்வுகளை நடத்தினார்கள். சிறிய தேசத்துள் எத்தனையோ பாரிய படைநகர்வுகளைச் செய்த போதும் - விடுதலைப் புலிகள் எதிர்சமர் புரிந்தும், படை நகர்த்தியும் குறிப்பிட்ட பிரதேசங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதன்மூலம் மக்கள் ஆயுதப் படையினரின் நேரடி அச்சுறுத்தலில் இருந்து பாதுகாக்கப்பட்டனரே தவிர, போராட்டத்தை வலுவிழக்கச் செய்ய முடியவில்லை. இதன்போது தான் இன்னுமொரு கொடூரமும் கட்டவிழ்த்து விடப்பட்டது.

பொருளாதாரத் தடை என்பதே இதுவாகும். அத்தியாவசியப் பொருட் களான அரிசி, சீனி, கோதுமை மா தொடக்கம் அன்றாட தேவையான அனைத்துப் பொருட்களுக்கும் தடையும், மட்டுப்படுத்தலும். இதனால் பொருட் களின் விலை அதிகரிப்பு ஒருபுறம், குறிப்பிட்ட பொருட்கள் கிடைக்காமையால் மருத்துவ வசதியின்மை, மாணவர்கள் கற்றல் உபகரணமின்றியென துயர நெருப்பில் வெந்தார்கள்.

சர்வதேச சமூகம் இதன் போது அவ்வளவாகக் கண்டு கொள்ளவில்லை. இவ்வளவு துயரை யும்வாரி இறைத்ததன் நோக்கம் இனத்தை அழிப்பதும், விடுதலைப் போராட்டத்தைத் தோற்கடிப்பதற்குமே. ஆனால். பேரினவாதிகளின் எண்ணம் நிறைவேறவில்லை.

துன்பக்கடலில் குளித்து நிமிர்ந்து நின்ற போதும்- நான்கு பக்கமும் நெருப்பினால் சூழப்பட்டிருக்க விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக போரை நிறுத்தினர். இலங்கை ஆட்சி பீட மாற்றம், புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து போர் நிறுத்தத்தைக் கொண்டு வர வழியமைத்தது.

இதன் போது இலங்கைத் தீவுக்குள் இரு தேசமுள்ளது. அதனால்தான் இரு படைகளுக்கிடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யக் கூடிய நிலைமையேற்பட்டது. இதனைப் புரியாதவர்கள் போல சிங்களப் பேரினவாதிகள் போர் நிறுத்தம் அமுலில் இருக்கின்ற போதே, விடுதலைப் போராட்டத்தைத் தோற்கடிக்க நயவஞ்சகமாகத் திட்டங்களைத் தீட்டினார்கள்.

அதற்கு வேறு குழுக்களில் பழி போடுவதன் மூலம் தமது வேலைகளைத் தடையின்றி நடத்த முடியுமெனவும் நம்பினார்கள். உலகின் சில விடுதலைப் போராட்டங்களை ஆட்டங்காணச் செய்தது போன்றே இதனைச செயற்படுத்த முடிவெடுத்துள்ளதாகவும், வீரமாகப் பேசிக் கொண்டனர். மக்கள் விளக்கமாகவும், விவேகமாகவும் இருந்தமையால் வஞ்சகர்களால் சாதிக்க முடியவில்லை.

இன்று படையினர் இலக்கு வைக்கப் படுகின்றபோது மக்கள் கொல்லப்படுவதாக பொய் பரப்புரை செய்பவர்கள் - நீர்வேலியில் இருவரின் படுகொலை, புங்குடுதீவில் தர்சினி பாலியல் வன்புணர்ச்சிக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டது, யாழ். முனியப்பர் கோவிலடியில் ஐவர் படுகொலை செய்யப்பட்டது, மன்னார் நூறு வீட்டுத் திட்டத்தில் நான்கு வயதுக் குழந்தை உட்பட நால்வர் படுகொலை செய்யப்பட்டது, திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை, மானிப்பாயில் மூன்று பெண்கள் படுகொலை எனப் பல படுகொலைகளை நிறைவேற்றியுள்ளனர். இது ஏன்? இப்படியானவற்றின் மூலம் இனத்தை அழிக்கவோ அல்லது போராட்டத்தை ஒடுக்கிவிடவோ முடியுமா?

எல்லாரும் ஏறி சறுக்கிய குதிரையில் சக்கடத்தாரும் ஏறி சறுக்கி விழுந்தாராம் என்ற நிலையை மஹிந்தராஜபக்ஷவும் அனுபவிக்கப்போகிறாரா?

வரலாற்றை மீளப் பார்க்கின் மீண்டும் தொடங்கும் மிடுக்காகவுள்ளது ஈழத்தமிழர் போராட்டம். ஆகவே... பொய்களைக் கூறி அமைதியென்பதே உயிர் மூச்செனப தமிழரின் மூச்சை நிறுத்தாது நிரந்தர தீர்வில்லையெனின் அடுத்த கட்டத்துள் தமிழர் போராட்டம் நகரும். கொடுமைகள் குதறி எறிந்து குனிந்த தமிழர் தலை நிமிரும்.

**கனகரவி**

# தமிழக காளை அடக்கும் போட்டிகளில் ஐவர் பலி; 240 இற்கும் மேல் காயம்!



மதுரை —

பொங்கல் பண்டிகையையொட்டி மதுரை பகுதிகளில் வீர விளையாட்டானஜல்லிக்கட்டுநடத்தப்பட்டுவருகிறது.

பொங்கல் தினத்தில் மதுரை அருகே உள்ள பாலமேட்டில் நடந்த ஜல்லிக்கட்டில் ஒருவரும், ஆனையூரில் நடந்த ஜல்லிக்கட்டில் ஒருவரும் பலியானார்கள்.

இந்த நிலையில் உலகப் புகழ் பெற்ற அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டு நேற்றுமுன்தினம் காலை தொடங்கியது.

காளைகள் வாடி வாசலில் திறந்து விடப்பட்டது. அதனை அங்கு குவிந்திருந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அடக்க பாய்ந்தனர். அவர்களைக் காளைகள் பதம் பார்த்தன. சிலர் தூக்கி எறியப்பட்டனர். சில காளைகளை இளைஞர்கள் அடக்கி பரிசுகளையும் பெற்றனர்.

முரட்டுக் காளைகள் குத்தி வீசியதில் 240 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். அவர்களுக்கு மருத்துவ குழுவினர் அங்கேயே முதலுதவி சிகிச்சையளித்தனர்.

படுகாயமடைந்து சிகிச்சைக் காக மதுரை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட 12பேர் கவலைக்கிடமான நிலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி அருகேயுள்ள நந்தமாடிப்பட்டியில் நடந்த ஜல்லிக்கட்டில் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 200 காளைகள் அவிழ்த்துவிடப்பட்டன.

இந்தக் காளைகள் சீறிப் பாய்ந்து பிடிக்க வந்த இளைஞர்களை தூக்கி எறிந்தன. இதில் சுமார் 60 பேர் காயம் அடைந்தனர்.

சிவகங்கை மாவட்டம் சிறாவயலில் நடந்த மஞ்சுவிரட்டு நிகழ்ச்சியில் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும்காளைகள் கலந்துகொண்டன. காளைகளைப் பிடிக்க இளைஞர்கள் போட்டி போட்டுக்கொண்டு ஓடினர்.

காளைகள்முட்டித்தள்ளி வீசியதில் 95 பேர் படுகாயமடைந்தனர். இதில் கூத்தங்குடியைச் சேர்ந்த காளிமுத்து பரிதாபமாக இறந் தார். மேலும் 60 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவரும் காளை முட்டி பரிதாபமாக இறந்தார்.

இதனால் நேற்றுமுன்தினம் நடந்த ஜல்லிக் கட்டு நிகழ்ச்சியில் காளைகள் முட்டியதில் 5 பேர் பலியாகினர். சுமார் 18 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில்தீவிரசிகிச்சை பெற்று வருகின்றனர்.

# தேர்தல் பிரசாரத்திற்காக தமிழகம் வருகிறார் சோனியா!



சென்னை —

தேர்தல் பிரசாரம் செய்ய சோனியா மார்ச் மாதம் தமிழகம் வருகிறார்.

தமிழக சட்டசபைக்கு எதிர்வரும் மே மாதம் தேர்தல் நடைபெறவுள்ளது. இதையொட்டி தேர்தல் பிரசாரத்தைத் தொடங்க முக்கிய கட்சிகள் தீவிரமாகி வருகின்றன.

அ.தி.மு.க.வினர் தேர்தல்பணியை ஏற்கனவே தொடங்கிவிட்டனர். மார்ச் மாதம் திருச்சியில் நடக்கும் மாநாட்டில் தேர்தல் பிரசாரத்தைத் தீவிரப்படுத்த தி.மு.க. திட்டமிட்டுள்ளது.

இதேவேளை விஜயகாந்த் எதிர்வரும் 19 ஆம் திகதி பிரசாரத்தைத் தொடங்குகிறார்.

தேர்தல் பிரசாரத்தை மாபெரும் பொதுக்கூட்டம் மூலம் தொடங்க தமிழக காங்கிரஸ் கட்சி திட்டமிட்டுள்ளது. இதற்காக சோனியாவை காங்கிரஸ் அழைத்தது. அவர்கள் அழைப்பை ஏற்றுத் தமிழகம் வர சோனியா சம்மதித்துள்ளார்.

மார்ச் மாத இறுதியில் தமிழகம் வரும்சோனியா சென்னையில் தீவுத் திடலில் நடக்கும் பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில் பேசுவார்.

இந்தப் பிரம்மாண்ட தேர்தல் பிரசார கூட்டத் தில் கூட்டணி கட்சித் தலைவர்கள் கருணாநிதி, ராமதாஸ், வைகோ ஆகியோரும் கலந்துகொள்வார்கள் என்று காங்கிரஸின் மூத்த தலைவர் ஒருவர் கூறினார். இது காங்கிரஸ் தொண்டர்களை உற்சாக மூட்டும் வகையில் இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

சோனியாவின் வருகை உறுதியாகிவிட்டதால் அதற்கான ஏற்பாடுகளை காங்கிரஸின் மூத்த த்லைவர்கள் செய்யத் தொடங்கிவிட்டனர். இதற்கிடையில் சட்டசபை தேர்தலை காங்கிரஸ் எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்று ஆலோசிக்க தமிழகத்துக்கான காங்கிரஸ் பொறுப்பாளர் வீரப்ப மொய்லி எதிர்வரும் 25 ஆம் திகதி சென்னை வருகிறார்.

தமிழக காங்கிரஸ் எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் மற்றும் நிர்வாகிகளுடன் அவர் ஆலோ சனை நடத்துவார்.

# பா.ம.கவின் வற்புறுத்தலால் தி.மு.க கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகளுக்கும் இட ஒதுக்கீடு

சென்னை —

தமிழக சட்டசபைத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ளதால் அரசியல் கட்சிகள் கூட்டணி, தொகுதி ஒதுக்கீடு குறித்து முன்கூட்டியே பேசி முடித்துவிட்டன. தி.மு.க, கூட்டணிகளை தக்கவைத்துக்கொள்ளும் வகையில் கேட்கும் இடங்களை கொடுக்கவும்சம்மதம் தெரிவித்துள்ளது.

தி.மு.க தலைவர் கருணாநிதி கூட்டணி ஆட்சிக்கும் தயார் எனக் கூறியிருப்பதன் மூலம் கூட்டணிக்கு மேலும் வலுச்சேர்த்து இருக்கிறார். தி.மு.க கூட்டணியில் பா.ம.க இடம் பெற்றுள்ளது.

அந்தக் கூட்டணியில் விடுதலைச் சிறுத்தை இயக்கத் தலைவர் திருமாவளவனை இழுக்க டொக்டர் ராமதாஸ் முயற்சிசெய்து வருகிறார். தி.மு.க திருமாவளவனை நேரடியாக க்கூட்டணிக்கு அழைக்காவிட்டாலும் டொக்டர் ராம தாஸ் மூலமாக இழுத்து கூட்டணிக்கு வலுச் சேர்க்க தீவிரம்காட்டி வருகிறது.

டொக்டர் ராமதாஸ், திருமாவளவனுக்கும் சேர்த்து தொகுதிகேட்டுப் பெற்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. விடுதலைச் சிறுத்தைகளின் செல்வாக்குள்ள வடமாவட்டத் தொகுதிகளை கருணாநிதியிடம் கேட்டுப் பெற்று இருப்பதாக கூட்டணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

டொக்டர் ராமதாஸ் கேட்ட தொகுதிகளை கருணாநிதி கொடுக்க சம்மதித்துவிட்டதால் பா.ம.க, விடுதலைச் சிறுத்தைகள் தொண்டர்கள் மகிழ் ச்சி அடைந்துள்ளனர்.

விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம் பா.ம.க சின்னத்தில் இம்முறை போட்டியிட முடிவு செய்துள்ளது. டொக்டர் ராமதாஸுடன் உள்ள உறவை மேலும் வலுப்படுத்துவதற்காக திருமாவளவன் இந்த முடிவை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

கூட்டணி குறித்து முடிவுசெய்ய விடுதலைச் சிறுத்தைகள் கட்சி திருமாவளவனுக்கு முழு அதிகாரம் கொடுத்துள்ளது. இதையடுத்து அவர் பா.ம.க சின்னத்தில் போட்டியிட சம்மதம் தெரிவித்தார்.

கடந்தமுறை திருமாவளவன் தி.மு.க கூட்டணியில் இடம்பெற்று தி.மு.க சின்னத்தில் போட்டியிட்டார். இந்தத் தேர்தலில் ஓரே கூட்டணியில் பா.ம.கவுடன் இணைந்து கைகோர்க்கிறார். பா.ம.க சின்னத்தில் விடுதலைச் சிறுத்தைக்கு கணிசமான தொகுதிகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

# படைப்பயிற்சிக் கல்லூரியில் கேணல் கிட்டு நினைவுநாள்

கிளிநொச்சி —

கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் 13 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் சிறப்புப் படையியல் பயிற்சிக் கல்லூரியில் சிறப்புற நினைவு கூரப்பட்டது.

காலையில் விசேட படையியல் ஒத்திகைப் பயிற்சியைத் தொடர்ந்து மாலை 3 மணிக்கு மேஜர் சோதியா படையணியைச் சேர்ந்த வேணி தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.


பொதுச்சுடரை வடபோர் முனைக் கட்டளைத் தளபதிகளில் ஒருவரான அன்ரன் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக்கொடியை தளபதி ஜெரி ஏற்றிவைத்தார். கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் திருவுருவப் படத்துக்கும், கேணல் கிட்டுவின் திருவுருவப்படத்துக்கும் மலர்மாலையை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி பொறுப்பாளர்களில் ஒருவரான புலிக்குட்டி ஏற்றிவைத்தார்.

பொது மாவீரர் படத்துக்கான மலர்மாலையை போர்ப்பயிற்சி ஆசிரியர் தமிழ்நிலா அணிவிக்க, 2001 ஆம் ஆண்டு இதேநாள் வீரச்சாவடைந்த மாலதி படையணி தளபதி லெப்.கேணல் மதியின் திருவுருவப் படத்துக்கான மலர் மாலையை மாலதி படையணி போராளி கலைமகள் அணிவித்தார்.

இதையடுத்து 3 நாட்களாக கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் ஞாபகார்த்தமாக நடந்த விளையாட்டுப் போட்டிகளின் இறுதிப்போட்டிகள் இடம்பெற்றன. இதில் மென்பந்தாட்டம், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து மாலை 7.30 மணிக்கு அரங்க நிகழ்வு ஆரம்பமாகின. சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணிப் போராளி மாநிலவன் தலைமையில் நடைபெற்ற கலை நிகழ்வுகளில் அகவணக்கத்தைத் தொடர்ந்து போராளிகளின் கலை நிகழ்வுகளும், பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

நினைவுரையை ராஜன் கல்விப் பிரிவு ஆசிரியர் குமரன் நிகழ்த்தியதைத் தொடர்ந்து வெற்றிபெற்றவர்களுக்குமான, விளையாட்டில் நடுவர்களாகக் கடமையாற்றியவர்களுக்குமான பரிசை வடபோர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் வழங்கி கௌரவித்தார்.




உப்புவெளியில் கடற்படையினர் மீதான கிளைமோர் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட சைக்கிள்.





உப்புவெளியில் கடற்படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமக்கள்.



கடற்படையினரின் தாக்குதலில் காயமடைந்த பொதுமகன்.




திருமலை மடத்துவெளியில் கிரனேட் தாக்குதலுக்குள்ளான வர்த்தக நிலையம்.

(படங்கள்: சசிக்குமார்)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



யாழ்.குடாநாட்டிலிருந்து நேற்று 300 இற்கும் அதிகமான குடும்பங்கள் வன்னிப் பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்தனர். அவர்கள் முகமாலையிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக இடைத்தங்கல் முகாமில் பதிவுகளை மேற்கொள்ளும் காட்சி.
படம் : தமிழர் புனர்வாழ்வுக் கழக ஊடகப் பிரிவு.

### படையினரை வெளியேறக் கோரி

# மன்னார் வைத்தியசாலையில் ஊழியர்கள் வேலைநிறுத்தம்

மன்னார் —

மன்னார் வைத்தியசாலை ஊழியர்கள் இருமணி நேரம் நடத்திய வேலை நிறுத்தத்தின் பின்னர் வைத்தியசாலை சூழலில் தங்கியுள்ள இராணுவத்தினரை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் உறுதியளித்தார். இதனையடுத்து ஊழியர்கள் நடத்திய வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.

மன்னார் வைத்தியசாலைச் சூழலில் தங்கியுள்ள இராணுவத்தினரின் காவலரண் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தையடுத்து - அம்புலன்ஸ் சாரதி ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் வைத்தியசாலைச் சூழலில் தங்கியுள்ள இராணுவத்தினர் உடனடியாக வெளியேற வேண்டும் என்றும், ஆயுதங்களுடன் வைத்தியசாலைச் சூழலில் நடமாடுவது உடன் நிறுத்தப்படவேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து வைத்தியசாலை ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 9.30 மணி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்ததால் வைத்தியசாலையின் அனைத்துப் பகுதிகளும் செயலிழந்தன.

இதனையடுத்து வைத்தியசாலை ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பான உயர்மட்ட மாநாடு வைத்தியசாலை அதிகாரி டொக்டர் கங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மாவட்டத் தலைவர், அரச அதிபர் வி.விஸ்வலிங்கம், மாகாண பிரதிப் பணிப்பாளர் எஸ்.ஆர்.யூட், மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சர் எஸ்.பி.குடாகொட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பொலிஸ் அத்தியட்சர் குடாகொட்டி - வைத்தியசாலைச் சூழலில் இருக்கும் இராணுவத்தினரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார். அத்துடன் வைத்தியசாலைச் சூழலில் இராணுவத்தினர் இனிமேல் ஆயுதங்களுடன் வரமாட்டார்கள் என்றும், வைத்தியசாலை ஊழியர்கள்மீது எந்தத் தாக்குதல்களும் நடத்தப்படமாட்டாது எனவும் உறுதியளித்தார். இதனையடுத்து ஊழியர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டனர். (மோ)

# திருமலை தாக்குதலுக்கு மக்கள் படை உரிமை!

திருகோணமலை —

திருமலையில் கடற்படையினரின் பஸ்மீதான கிளைமோர்த் தாக்குதலுக்கு திருமலை மாவட்ட பொங்கியெழும் மக்கள்படை உரிமை கோரியுள்ளது.

இது தொடர்பாக பொங்கியெழும் மக்கள் படையால் விடுக்கப்பட்ட அறிக்கையில்:-

தமிழ் மக்கள் மீதான வன்முறையாளர்களே! இது உங்கள் கவனத்திற்கு!

திருகோணமலை மாவட்டத்தில், படையினருக்கு எதிராக இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலை திருமலை மாவட்ட பொங்கியெழும் மக்கள் படையினராகிய நாமே மேற்கொண்டோம். திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் மீது, மேலும் மேலும் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் அடாவடித்தனங்களை உடனடியாக நிறுத்தவேண்டும். அவ்வாறு அவர்கள் செய்யத் தவறும் பட்சத்தில் நாமும் எமது தாக்குதல்களை விரிவுபடுத்துவோம்.

அகிம்சை வழியில் தமிழ் மக்கள் எத்தனையோ தடவைகள் இராணுவ வன்முறைகளை எதிர்த்துப் போராடியபோதும், அதற்குச் சரியான எந்த விதமான பதிலும் வழங்கப்படாமல், மாறாக - தமிழ் மக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இந்த நிலைமைகளிலேயே இராணுவத்தினரின் மக்கள் மீதான இந்தத் தாக்குதலுக்கு பதிலாகவே எம்மால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சகபாடி மீது சந்தேகத்தில் கடற்படைச் சிப்பாய் சூடு!

கொழும்பு —

கடற்படைச்சிப்பாய் ஒருவர் வெலிசறை கடற்படைத்தளத்தில் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் சக சிப்பாய் படுகாயமடைந்தார்.

வெலிசறை கடற்படைமுகாமில் வெடிபொருட்கள் பிரிவுக்குப் பாதுகாப்பாக இருக்கும் சிப்பாய் மீது அதே முகாமில் பணியாற்றும் மற்றொரு சிப்பாய் துப்பாக்கிச் சூடு நடத்தினார். இதில் படுகாயமடைந்த கடற்படைச் சிப்பாய் ராகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

காயமடைந்த சிப்பாய் இருட்டில் வரும்போது, சந்தேகத்திற்கிடமான ஒருவரே வருவதாகக் கருதிய மற்றொரு சிப்பாய் அவர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக பதில் இராணுவப் பேச்சாளரான பிரிகேடியர் அத்துல ஜெயவர்த்தன தெரிவித்தார்.

இச்சம்பவத்தையடுத்து இராணுவத்தினரும், கடற்படையினரும் இணைந்து முகாமைச்சுற்றி தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இராணுவத்தினரும், கந்தானை பொலிஸாரும் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (01)

## சிகையலங்கரிப்பாளர்...

கொல்லப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் இரவு கடையை மூடிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையிலேயே கைதடி பாலத்துக்கப்பால் தச்சன்தோப்பு வீதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்துக்கு இராணுவத் தரப்பே காரணம் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலையில் இவர்களது சடலங்கள் கைதடி பாலத்துக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டன. சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிவான் பிறேம் சா[illegible] சடலங்களை மரண விசாரணைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இதனையடுத்து சாவகச்சேரி பொலிஸார் சடலங்களை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திலும் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (91)

## கண்காணிப்புக்...

வினவியபோது, அவர்கள் காரணத்தை தெரிவிக்கவில்லை. ஆனால் கொழும்புத் தலைமையகம் கட்டளை பிறப்பித்திருப்பதால் அலுவலகத்தை மூடியிருப்பதாகத் தெரிவித்தனர் என்றும் சி.எழிலன் தெரிவித்தார்.

கடந்த ஒருசில வாரங்களாக திருகோணமலையில் அதிகரித்துவரும் மோதல் நிலைமைகளைக் கருத்திற் கொண்டு தமது பணிகளைத் தற்காலிகமாக மறுஅறிவித்தல் வரை நிறுத்துவதாக திருகோணமலை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

இதனையடுத்து திருமலை உள் துறைமுக வீதியில் அமைந்திருந்த கண்காணிப்புக்குழுவின் அலுவலகப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

நிலைமைகள் சீரடையுமாயின் மீண்டும் திருமலையில் தமது பணிகளை ஆரம்பிக்கமுடியும் என்றும் கண்காணிப்புக்குழுவினர் கூறினர். (10,04)

## முஸ்லிம்...

இருந்து தப்பி பொலிஸாரின் உதவியுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

தங்களை இனந்தெரியாத 5 பேர் கொண்ட குழுவினர் வாகனத்தில் கடத்திச்சென்று தாக்கியதாக அவர் தெரிவித்தார்.

கொல்லப்பட்டவரின் சடலம் தமிழ் பிரதேசமான ஆலையடிவேம்பிலுள்ள வயல் வெளியில் கண்டெடுக்கப்பட்டது.

இதையடுத்து முஸ்லிம் பிரதேசங்களூடாகச் சென்ற சில தமிழர்கள் தாக்கப்பட்டனர்.

எல்லைப்புறங்களில் இருந்து 100க்கும் மேற்பட்ட தமிழ் குடும்பங்கள் தற்போது இடம்பெயர்ந்துள்ளன. முஸ்லிம் பிரதேசங்களில் வியாபார நிலையங்கள், அலுவலகங்கள் அனைத்தும் நேற்றுப் பிற்பகலுடன் மூடப்பட்டன. பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் மேலதிகமாக குவிக்கப்பட்டனர்.

அக்கரைப்பற்று முஸ்லிம் பகுதியில் சந்திரநாதன் சசிக்குமார் (வயது 23), கோபாலகிருஸ்ணன் சுரேஸ் (வயது 16) ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் அக்கரைப்பற்று, திருக்கோவில், ஆலையடிவேம்பு மற்றும் பொத்துவில் ஆகிய பிரதேசங்களில் நேற்று முழுக் கடையடைப்பு நடத்தப்பட்டது. இதனால், அப்பிரதேசங்களில் வழமை நிலையும் பாதிக்கப்பட்டது.

## இராணுவ...

அரசாங்க உறுப்பினர்களின் இருக்கையூடாக சபாநாயகர் லொக்குபண்டார தமது இருக்கைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், புங்குடு தீவு தர்சினி, திருகோணமலை5 தமிழ் மாணவர்கள் மீதானபடுகொலைகள் மற்றும் அப்பாவித்தமிழ் மக்களை இராணுவத்தினரும் அவர்களோடு சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுவினரும் படுகொலை செய்வதைக் கண்டித்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

தமிழ் மக்கள் மீதான படுகொலைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும், கொழும்பு, மலையகம் உள்ளிட்ட பகுதிகளில் தமிழர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை உடனே நிறுத்தவேண்டுமென்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழக்கமிட்டனர்.

அரசாங்க ஆதரவு உறுப்பினர்கள் சிலர் தமிழ் உறுப்பினர் களுக்கு எதிராக குரல் எழுப்பிய அதேசமயம், ஜே.வி.பி உறுப்பினர்கள் எதுவித எதிர்ப்பும் தெரிவிக்காமல் இருந்தனர்.

இந்த நிலையில் நாடாளுமன்றத்தை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறி வித்தார்.

இதையடுத்து நாடாளுமன்றம் மீண்டும் கூடிய போதும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் கண்டன முழக்கங்களை எழுப்பினர். இதனால் நாடாளுமன்றத்தின் சபை நடவடிக்கைகளை இன்று வரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் லொக்கு பண்டார அறிவித்தார். (01)

## இராணுவ வன்முறை...

படுகொலை செய்யப்படுவதும், இராணுவத்தினரது நெருக்குவாரங்களும், நெருக்கடிகளும், அச்சுறுத்தல்களும் அதிகரித்து வருகின்றன.

நாளாந்தம் எமது மக்கள் கொல்லப்படுகின்ற சூழல் உருவாகியுள்ளது. ஆயிரக் கணக்கான குடும்பங்கள் தங்கள் சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

யுத்தகால நெருக்கடி போலவே பாரிய அச்சுறுத்தலை, பாரிய கொலை நடவடிக்கைகளை எமது மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளார்கள் என்பதை இன்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

மிக மோசமான நிலைமை உருவாகிக்கொண்டிருப்பதை நோர்வேத் தரப்பிற்கு எடுத்து விளக்கியுள்ளோம்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை அமுலாக்குவது தான் எல்லாவற்றுக்கும் தீர்வு என்பதை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். அதையே இன்றும் வலியுறுத்தினோம். ஏனெனில் எமது மக்களின் வாழ்க்கையில் இயல்புநிலையைக் கொண்டு வரவேண்டும்.

இராணுவ நடமாட்டத்தைக் குறைத்து நெருக்குவாரங்களையும், அச்சுறுத்தல்களையும் குறைத்து நெருக்கடி இல்லாமல் செய்வதன் மூலம்தான் நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

தற்போது அனைத்து இடங்களிலும் யுத்த காலம் போலவே இராணுவம் தமது முழு காடைத்தனங்களையும், செயற்பாடுகளையும் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இவற்றுக்கு உடனடியாகத் தீர்வுகாணப்படவேண்டும். இல்லையெனில் மக்களின் கொந்தளிப்பான நிலைப்பாடுகளை மாற்றுவது கடினமாக இருக்கும்.

இலங்கைக்கு நோர்வே உயர்மட்டக் குழு வருகை தரவுள்ளது. 23ஆம் திகதி எமது தலைவரைச்சந்திக்க உள்ளனர். எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாட்டை தலைவர் எடுத்து விளக்குவார்.

இந்த சந்திப்பின் போது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் பேச்சுக்களில் பங்கேற்பார்.

தெற்கில் ஏற்பட்டுவருகின்ற சூழல், அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் மற்றும் எமது தாயகத்தில் எமது மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இராணுவ வன்முறைகள், அடாவடித்தனங்கள் ஆகியவை ஒரு சுமுகமான சூழலைக் கொண்டுவருமா? என்பது சந்தேகத்துக்கிடமான நிலையைத்தான் இன்று வரை உருவாக்கியுள்ளது.

நோர்வே உயர்மட்டக்குழுவின் பயணத்தின்போது படைத்தரப்போ, அரசாங்கமோ தங்களுடைய நிலைப்பாடுகளில் மாற்றங்களை மேற்கொண்டால்தான் நிலைமைகள் சீராகும். அவர்களது நிலைப்பாடுகள் மாறவில்லையெனில் நிலைமை மிகவும் கடினமானதாகவே இருக்கும் என கருதுகின்றோம் எனத் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

தரைவழியாக கிளிநொச்சிக்கு வந்த நோர்வே குழுவினருடனான சந்திப்பில் விடுதலைப் புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலக பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கிளைமோரில் சிக்கி...

பண்ணையில் பணிபுரியும் ஒரு தொழிலாளியும் இறந்தனர். இவர் கள் இருவரின் சடலங்களும் திருகோணமலை பொதுவைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

கொல்லப்பட்ட இருவரும் அப்பாவிப் பொதுமக்கள் என்றபோதும் கொல்லப்பட்டவர்கள் இருவரும் விடுதலைப்புலிகள் என்று படைத்தரப்புக் கூறியுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த அதிகாரி ஒருவர் உட்பட கடற்படையினர் 12 பேரும் முதலில் கடற்படைத் தளவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஐவரின் நிலை கவலைக்கிடமான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புத் தேசிய வைத்தியசாலைக்கு ஹெலிகொப்டர் மூலம் அனுப்பிவைக்கப்பட்டனர்.

இதேவேளை, படையினரின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த 7 தமிழ்ப் பொதுமக்களும் திருமலை பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளின் உட்புறத்தில் மறைத்துவைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டே வெடித்துள்ளதாக அறிய முடிகின்றது.

சம்பவம் இடம்பெற்ற இடத்தை சூழ வசிக்கும் தமிழ்ப் பொதுமக்கள் 50 இற்கும் மேற்பட்டவர்கள் உடனடியாக இராணுவ மற்றும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு உப்புவெளி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கைது செய்யப்பட்டுள்ள இவர்களில் பெண்கள், சிறுவர்கள், முதியவர்களும் அடங்குவர். இவர்கள் ஒன்றரை மணி நேரத்துக்கும் அதிகமாகக் கடும் வெயிலில் நடுவீதியில் இருத்தி வைக்கப்பட்டனர். அப்போது பல இளைஞர்கள் மற்றும் பெண்கள் மீது படையினர் தாக்குதலும் நடத்தினர்.

றிமோட் கொன்ரோல் மூலம் வெடிக்கவைக்கப்பட்ட கிளைமோர் சற்று இலக்குப் பிசகியதால் பெரும் இழப்புத் தவிர்க்கப்பட்டதாக இராணுவப் பதில் பேச்சாளர் பிரிகேடியர் அத்துல ஜெயவர்த்தன தெரிவித்தார்.

இதேவேளை பகல் 11.45 மணியளவில் மடத்தடிச்சந்தியில் உள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்துக்கு எதிர்ப்புறமாகவுள்ள மோட்டார் உதிரிப்பாக விற்பனைநிலையம் ஒன்றின் மீது இனந்தெரியாதோர் நடத்திய கிரனேட் தாக்குதலில் கடையின் உரிமையாளரான தமிழ் வர்த்தகர் கடுமையாக காயமடைந்தார்.

முகம் மற்றும் நெஞ்சுப் பகுதியில் கடுமையாக காயமடைந்த அவர் முதலில் திருமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மாலையில் மேலதிக சிகிச்சைக்காக கண்டி போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

மேற்படி சம்பவங்களால் நகரம் மீண்டும் பதட்டமான நிலைக்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)(10)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.01.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.